இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 39 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 31 – ஞாயிற்றுக்கிழமை 17 செப்டம்பர் 2023 – வெளியூர் 36 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 39: Thiruvalluvar Year - 2054 - Aavani 31- Sunday 17 September 2023 - Dak 36 Pages ₹ 5.00

## வேலூரில் இன்று கழக முப்பெரும் விழா! கழகத் தலைவர் -

# முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்குகிறார்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை! பொருளாளர் டி.ஆர்.பாலு - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - துணைப் பொதுச் செயலாளர்கள் வாழ்த்துரை!

**வேலூர், செப். 17-**

**வேலூரில் இன்று தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா, தி.மு.க. பவள விழா, தி.மு.க. முப்பெரும் விழா கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் நடைபெறுகிறது. இவ்விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுகள் வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்!**

இதுபற்றிய விவரம் வருமாறு:-



கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரமாயிரம் பொதுமக்கள் முன்பாக, “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது” என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1949-இல் அவர் உருவாக்கிய இயக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு, அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்ட இயக்கம்.

ஒரு மாநிலக் கட்சி முக்கால் நூற்றாண்டு காலம் தன் மக்களின் நலன் காக்க உறுதியாகப் போராடியும், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சியால் அந்த மாநிலத்தில் மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியும், இந்தியாவுக்கே முன்னோடியான பலதிட்டங்களை வகுத்தும், சட்டங்களை உருவாக்கியும் இன்று இந்தியாவை வழி நடத்தக்கூடிய வகையில் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றும் திகழ்கிறது என்றால் அந்தப் பெருமை நம் உயிராகவும், உதிரமாகவும் திகழ்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரியது.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75-ஆவது ஆண்டினை - பவள விழாவினைக் கொண்டாட இருக்கிறது. அதுவும், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில். இதைவிட என்ன மகிழ்ச்சி நமக்கு இருக்க முடியும்?

வீரம் செறிந்த வேலூரின் அடையாளமாக கோட்டை இருப்பதுடன், வேலூர் எப்போதும் தி.மு.கழகத்தின் கோட்டைதான் என்பதைப் பல்வேறு களங்களில் நிரூபித்திருக்கிறது. கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்களை நமக்கு வழங்கியுள்ள கோட்டை. தனது மாணவப் பருவத்திலேயே மொழிப்போர்க் களம் கண்டு, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக, அவரின் நிழலாக, கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, கொள்கைத் தடம் மாறாமல் பயணிக்கின்ற பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் வேலூரில் முப்பெரும் திருவிழா - கழகப் பவள விழா நடைபெறுகிறது.

விழாவிற்கான பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் நந்தகுமார் அவர்களும் கழக நிர்வாகிகளும் இணைந்து சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் முதல்வரின் அழைப்பின்படி, தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா - தி.மு.க. பவள விழா ஆண்டு - தி.மு.க. முப்பெரும் விழா 2023 - வேலூர் பள்ளிகொண்டாவில் இன்று (17.9.2023 - ஞாயிறு) மாலை 5 மணியளவில் நடைபெறுகிறது.

**பரிசு வழங்கும் விழா!**

முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் கழக விருதுக்காக தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பணமுடிப்பினை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பிக்கிறார்.

**விருது வழங்கும் விழா!**

விருது வழங்கும் விழாவில் வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வரவேற்கிறார்.

கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெரியார் விருதை கி.சத்திய சீலனுக்கும், அண்ணா விருதை க.சுந்தரத்திற்கும், கலைஞர் விருதை ஐ.பெரியசாமிக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதை திருமதி மலிகா கதிரவனுக்கும், பேராசிரியர் விருதை ந.இராமசாமிக்கும் வழங்கிச் சிறப்புரை யாற்றுகிறார்.

இவ்விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

வேலூர் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நன்றி கூறுகின்றார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

---

## காவிரி நீர்: ஆதாரமற்ற அறிக்கைகளை கர்நாடக அரசு வெளியிடுவதா? தமிழ்நாட்டிற்கு உரிய நீரை திறந்துவிடக் கோரி

# அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் ஒன்றிய அமைச்சரிடம் மனு!

**சென்னை, செப். 17-**

**“காவிரி நீர் அளிக்காததற்கு உண்மைக்குப் புறம்பான பல காரணங்களை ஒன்றிய சல்சக்தி அமைச்சரிடம் கர்நாடக அரசு தெரிவித்திருப்பது தொடர்பாக தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு ஒன்றினை ஒன்றிய ஜல்சக்தி அமைச்சரிடம் அளிப்பார்கள்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



காவிரி நதிநீர் பிரச்சினையில் நீண்டகால சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, ஒரு சராசரி ஆண்டில் பில்லிகுண்டுலுவில் கர்நாடகா வழங்க வேண்டிய மாதாந்திர நீர் அளவின் கால அட்டவணை, உச்சநீதிமன்றத்தின் 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது.

மேலும், 05.02.2007 தேதியிட்ட காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதித் தீர்ப்பு மற்றும் 16.02.2018 தேதியிட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, பற்றாக்குறை ஆண்டில், அதற்கேற்ற விகிதாச்சார (pro rata sharing) அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே நீர் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அதன்படி இந்த ஆண்டில் 14.9.2023 வரை தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டிய 103.5 டி.எம்.சியில் 38.4 டி.எம்.சி. மட்டுமே கிடைத்துள்ளது. இது 65.1 டி.எம்.சி குறைவு ஆகும்.

**உச்சநீதி மன்றத்தில் மனு!**

மேட்டூர் நீர்த்தேக்கத்தின் 69.25 டி.எம்.சி. நீர் இருப்பு, இந்திய வானிலை ஆய்வுத்துறையின் (IMD) இயல்பான மழைப்பொழிவு அறிக்கை மற்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவு களின் அடிப்படையில் பெறப்பட வேண்டிய நீர் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, குறுவை பயிரிடுவதற்கும், சம்பா பயிர்களுக்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்குவதற்கும் ஏதுவாக, 12.06.2023 அன்று நீர் திறக்கப்பட்டது.

**கர்நாடக அரசின் தவறான கருத்து!**

கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய பங்கை, விகிதாச்சாரப்படி கூட விடுவிக்காததாலும், உச்சநீதிமன்ற ஆணையின்படி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

ஏற்படுத்தப்பட்ட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு (CWRC) ஆகியவற்றால் இதற்குத் தீர்வு காண முடியாததாலும், தமிழ்நாடு அரசு 14.08.2023 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்தது. இம்மனு விசாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், தமிழ்நாட்டின் கோரிக்கை நியாயமற்றது என்றும், தமிழ்நாடு தனது ஆயக்கட்டை அதிகப்படுத்தி உள்ளது என்றும் ஆதாரமற்ற அறிக்கைகளை கர்நாடக அரசு வெளியிட்டுள்ளது. மேலும், கர்நாடக அரசு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்களுக்கு 13.09.2023 அன்று எழுதிய கடிதத்தில், தமிழ்நாட்டிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் போதுமான மழை கிடைக்கும் எனவும், காவிரி டெல்டாவில் தேவையான அளவு நிலத்தடிநீர் இருக்கிறது எனவும் தவறான கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

**அமைச்சர் துரைமுருகன் அளிக்கிறார்!**

இத்தகைய உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை ஒன்றிய அரசு கருத்தில் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி ஒரு கோரிக்கை மனுவை (Memorandum), ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களிடம் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளிக்க உள்ளார்கள்.

தற்போது, 13.09.2023 முதல் 15 நாட்களுக்கு, கர்நாடக காவிரிப் பகுதியில் சராசரி இயல்பான மழை இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு துறை (IMD) அறிக்கையின் அடிப்படையில் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு (CWRA) கணித்துள்ள நிலையில், தமிழ்நாட்டிற்கு விநாடிக்கு 12,500 கனஅடி நீரை கர்நாடகா விடுவித்திட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) உத்தரவிட வேண்டும் என ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் ஆணையத்திற்கு அறிவுறுத்த வேண்டும் என்றும், CWMA/ CWRC அளித்த உத்தரவின்படி தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்டுள்ள நீரை குறித்த காலத்தில் வழங்குமாறு கர்நாடகாவிற்கு தகுந்த அறிவுரையை வழங்கிட வேண்டும் என்றும் இம்மனுவில் வலியுறுத்தப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### முற்றிலும் தோல்வியுற்ற பா.ஜ.க. அரசை எதிர்கொள்ள நாடாளுமன்றத்தில் "இந்தியா" கூட்டணியுடன் இணைந்து

# ஜனநாயகத்தைக் காத்திடுவோம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, செப். 17–**

**"முற்றிலும் தோல்வியுற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்கொள்ள 'இந்தியா' கூட்டணியுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தைக் காத்திடுவோம்" என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், நேற்று (16.9.2023), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., மற்றும் கழக மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**முதல்வர்**
**மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு!**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளில் – தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை" துவக்கி வைத்து – ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிரின் குடும்பங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாட்டின் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக தலைவருமான தளபதி அவர்களுக்கு இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நன்றியை – பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

காவிரி நதிநீர் பிரச்சினையில் நடுவர் மன்றமும், உச்சநீதிமன்றமும் அளித்துள்ள தீர்ப்புகளை பொருட்படுத்தாமல், மழை குறைபாட்டைக் காரணம் காட்டி, தமிழ்நாட்டின் பங்கான நீரை கர்நாடக மாநிலம் விடுவிக்காததால் குறுவைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சம்பா பயிரும் கேள்விக்குறியாகி உள்ளது. எனவே உச்சநீதி மன்ற தீர்ப்பின்படி தமிழகத்திற்குச் சேர வேண்டிய நீரை உடனடியாக விடுவிக்குமாறு கர்நாடக அரசுக்கு ஒன்றிய அரசு வலியுறுத்திட வேண்டும் எனக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு**
**ஒன்றிய அரசு தடைக்கல்!**

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ் நாட்டிற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை முடக்கி வைத்திருப்பது போல் – இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிக்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் முதல் சந்திப்பிலேயே வலியுறுத்தியும், இன்றுவரை ஒன்றிய அரசின் அமைச்சரவைக்கூட்டத்தில் வைக்காமல் இழுத்தடித்து, தமிழ் நாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக் கல்லை ஏற்படுத்தி வருகிறது.

> **ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ் நாட்டிற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை முடக்கி வைத்திருப்பது போல் – இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் பணிக்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்யவில்லை. முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் முதல் சந்திப்பிலேயே வலியுறுத்தியும், இன்றுவரை ஒன்றிய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்காமல் இழுத்தடித்து, தமிழ்நாட்டு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு தடைக்கல்லை ஏற்படுத்தி வருகிறது.**

பா.ஜ.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட நீட் தேர்வால், தமிழ்நாட்டில் தற்கொலைகள் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றமே நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க மசோதாவை இரண்டு முறை ஒருமனதாக நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த பிறகும் ஒன்றிய அரசு அந்த மசோதாவிற்கு இன்னும் ஒப்புதல் அளிக்காமலேயே இருப்பது பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டிற்கு செய்து வரும் மாபெரும் துரோகம். நீட் தேர்வு மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதலை அளித்திட தொடர்ந்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. குரல் எழுப்பும்.

**மகளிர் மசோதாவை**
**நிறைவேற்ற வலியுறுத்தல்!**

பெண்ணுரிமை வழங்குவதில் தலைசிறந்த மாநிலமாக மட்டுமின்றி "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை" பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று செயல்படுத்தியுள்ள சூழலில், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 விழுக்காடு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதா பற்றி வாயே திறக்காமல் காலத்தை கழித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இன்று அவர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்களும் மகளிர் மசோதாவை நிறைவேற்றக் கோரி எண்ணற்ற முறை கோரிக்கைகள் வைத்தும் அதன் மீதான விவாதத்திற்கு கூட பா.ஜ.க. அரசு தயாராக இல்லை. எனவே இந்த சிறப்புக் கூட்டத்தில் நாடாளு மன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33 விழுக்காடு மகளிருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலுவாக குரல் எழுப்ப இக்கூட்டம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவிற்கே முன்னோடியாக சமூகநீதிக்கான குரல் எழுப்பும் நமது இயக்கம், இச்சிறப்பு கூட்டத் தொடரில், **"மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி ஒன்றிய அரசின் துறைகளில் முழு ஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும்", "அரசு துறைகளில் பதவி உயர்விலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்", "தனியார் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திட வேண்டும்", "பிற்படுத்தப் பட்டோருக்கு உள்ள கிரீமிலேயரை 25 லட்சமாக உயர்த்த வேண்டும்", "உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதி அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்"** உள்ளிட்ட கோரிக்கைகளோடு "இட ஒதுக்கீட்டிற்கு உள்ள 50 விழுக்காடு உச்சவரம்பு நீக்கப்படும்" மசோதாவையும் இந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்திலேயே கொண்டு வந்து நிறைவேற்ற வலியுறுத்துவோம்.

ஒன்றிய பா.ஜ.க. அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட "விஸ்வகர்மா யோஜானா" திட்டம், குலத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலான நடைமுறைகளை வகுத்து, அதிலும் குறிப்பாக 18 வயது நிறைந்துள்ளவர்களை கல்லூரிக்கு செல்லவிடாமல், பரம்பரை தொழிலையே செய்யத் தூண்டும்குலத்தொழிலை மேலோங்கச் செய்யும் திட்டமிட்ட சூழ்ச்சி. இத்திட்டத்தையும் எதிர்த்து நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் குரலெழுப்புவார்கள்.

**'இந்தியா' கூட்டணிக்கு அஞ்சி**
**பெயர் மாற்றம்!**

எங்கள் ஆட்சி காலத்தில் நாட்டையே மாற்றுவோம் என பேசி வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, தற்போது "இந்தியா" கூட்டணிக்கு அஞ்சி "பாரத்" என்று நாட்டின் பெயரை மாற்றுவதிலேயே உன்னிப்பாக இருக்கிறது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் முற்றிலும் தோல்வியுற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை, நாடாளுமன்றத்தில் "இந்தியா" கூட்டணி கட்சிகளுடன் ஒருங்கிணைந்து எதிர்கொண்டு இந்திய ஜனநாயகத்தை காத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### 1000 பூங்கொத்துக்கள் மற்றும் 1000 கிலோ மலர்கள்!

## மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு நன்றி தெரிவித்த 1000 மாணவிகள்!

### சென்னை எவர்வின் பள்ளியில் பிரமாண்டம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை பாராட்டும் விதமாக சென்னை கொளத்தூர் எவர்வின் வித்தியாஷ்ரம் பள்ளியில் நேற்று, சனிக்கிழமை, பிரமாண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இதில் 1000 உயர் வகுப்பு மாணவிகள் பங்கேற்றனர்.




பள்ளி மைதானத்தில் 10,000 சதுர அடி பரப்பில் ரோஜா மலர்கள் தூவப்பட்டிருந்தன. இதன் மையப் பகுதியில் 1000 மாணவிகள் கையில் பூங்கொத்துக்களுடன் 1000 என்ற எண்ணை வடிவமைத்து அமர்ந்திருந்தனர். இவர்கள் பூங்கொத்துக்களை பல்வேறு கோணங்களில் அசைத்தது கண்ணை கவரும் வகையில் இருந்தது. மேலும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் முதல்வருக்கு நன்றி" என்ற வாசகங்களை 1000 கிலோ சாமந்தி மற்றும் ரோஜா மலர்களைக் கொண்டு வடிவமைத்திருந்தனர்.


இதுபற்றி 9ம் வகுப்பு மாணவி நந்தினி கூறுகையில் "இந்த திட்டம் மூலம் எனக்குத் தெரிந்த பல பெண்கள் பயனடைந்து உள்ளனர். அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்து தமிழக அரசையும் முதலமைச்ச ரையும் 'பாராட்டி வருகின்றனர். இதன் காரணமாகவே அந்த ஒரு கோடி பெண்களின் சார்பாக நாங்கள் இந்த பிரமாண்ட நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறோம்" என்றார்.

இதேபோல 8ம் வகுப்பைச் சேர்ந்த அ. சாம்பவி "இன்று தமிழ்நாடே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி உள்ளது. இது பெண் உரிமையை நிலைநிறுத்துவதற்கும் அவர்களது சிறு சிறு செலவுகளுக்கு பிறரை சார்ந்திராமல் இருப்பதற்கும் பெரிதும் உதவும். இதனால் முதலமைச்சரை நேரில் சந்தித்து பாராட்ட விரும்புகிறோம்" என்று தன் ஆவலை வெளிப்படுத்தினார்.

நிகழ்ச்சியில் எவர்வின் பள்ளிக் குழும சி.இ.ஓ மகேஸ்வரி, மூத்த முதல்வர் புருஷோத்தமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


கலைஞர் 100
1924 - 2023

சமூகநீதி நாள்



தந்தை பெரியார்
அவர்களின்
145ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
தந்தை பெரியார்
அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 17.9.2023, ஞாயிற்றுக்கிழமை | நேரம் : காலை 10.00 மணி
இடம் : அண்ணா சாலை, வேலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வேலூர்

செ.ம.தொ.இ/1050/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை – 600 009




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.9.2023) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவரும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவருமான டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் பொருளாளர் சீனிவாச ராஜ் ஆகியோர் சந்தித்து, இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள உலகப் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான (ICC Men's Cricket World Cup India 2023) கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்கள். இதுதொடர்பாக முதலமைச்சர் அவர்கள் "INDIA will Win என்று வாழ்த்து தெரிவித்து டிவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

சேலம், செப். 17 -

தமிழக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக நேற்று முன்தினம் 2வது நாளாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து கடந்த 3 மாதத்துக்கும் மேலாக டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப் பட்டு வருகிறது. இதன் காரணமாக அணையின் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. மேலும் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை சரிவர பெய்யாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து காணப் பட்டது.

இதற்கிடையே தமிழக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக நேற்று 2வது நாளாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 41.76 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 47 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 6500 கனஅடி வீதம் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# அயராது உழைத்திட்ட அனைவரையும் பாராட்டி மகிழ்கிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, செப். 17-

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை" மிகக்குறுகிய காலத்தில் செயல்படுத்திட உழைத்த அனைவரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மிகக் குறுகிய காலத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளைக் கண்டறிவதற்கு அயராது உழைத்திட்ட அனைவரையும் இத்தருணத்தில் பாராட்டி மகிழ்கிறேன்.**

**இத்திட்டத்தில் களப்பணியாற்றிய கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், இல்லம் தேடிக் கல்வி திட்டத்தின் தன்னார்வலர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், நியாய விலைக் கடைப் பணியாளர்கள், நகராட்சி மாநகராட்சிப் பணியாளர்கள், தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவன பணியாளர்கள் மற்றும் அனைத்து அரசுத் துறை அலுவலர்களையும் இத்திட்ட நிகழ்வின் வெற்றியில் பாராட்டி மகிழ்கிறேன்!**

**களப்பணியாளர்களை வழிநடத்திய மாவட்ட ஆட்சியர்கள், அரசு செயலாளர்கள், தலைமைச் செயலாளர்கள் வரை உள்ள அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

### திருவண்ணாமலை மாவட்டம் தச்சம்பட்டு ஊராட்சியில்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!

### அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, செப்.17-

திருவண்ணாமலை மாவட்டம், தச்சம்பட்டு ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை நேற்று முன்தினம் (15.09.2023) வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம், தச்சம்பட்டு ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கி பேசியதாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் 4500 மகளிர்களுக்கு மாதம்தோறும் ரூ.1000/ பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கப்பட்டுள்ளது. 5 முறை தமிழ்நாடு முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர்களுக்காக எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளான 15.09.2023 அன்று அவர் பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தற்கு மாவட்ட மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் தான் மகளிர்களுக்கு எண்ணற்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற உடன் கொரோனா காலத்தில் நியாயவிலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4000 வழங்கப்பட்டது. கூட்டுறவு வங்கியில் நகைக்கடன் தள்ளுபடி, மகளிர்களுக்கு கட்டணமில்லா பயண பேருந்து, அரசு பள்ளியில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ரூ.1000 வழங்கும் புதுப்பெண் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை திராவிட மாடல் ஆட்சியில் மகளிர்களுக்காக செயல்படுத்தப் பட்டுள்ளது.

நீதிக்கட்சி தலைமையிலான ஆட்சியில் தான் பெண்களுக்கு முதன்முதலில் தேர்தலில் வாக்குரிமை கொடுக்கப்பட்டது. அதன் பின்பு திராவிட கட்சி பகுத்தறிவு தந்தை பெரியார் அவர்கள் 1929ல் செங்கல்பட்டில் மாநாடு நடத்தி ஆண், பெண் இருபாலருக்கும் சொத்தில் சமபங்கு உரிமை அளிக்க வேண்டும் என தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அதன்பின்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் 1989ல் பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உரிமை உண்டு என ஆணை பிறப்பித்தார். மேலும் கணவரை இழந்த பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தவர். அதே போல் 1973ம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான்.

காவல் துறையில் பெண்களும் பணியில் சேரலாம் என முதன்முதலில் ஆணையை கொண்டு வந்தார். இதனை தொடர்ந்து உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீட்டால் தான் பெண்கள் அதிகளவில் பதவியில் உள்ளனர். அதற்கு காரணம் கலைஞர் அவர்கள் தான். எனவே இந்த ஆட்சி ஆண்களை விட பெண்களுக்கு தான் அதிக திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதுமட்டுமில்லாமல் ஆறுகளுக்கு கூட பெண்கள் பெயர்களில் தான் பெயர் உள்ளது. தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சர் காலை உணவு என்ற மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.


மேலும் தகுதியுள்ள மகளிர்களுக்கு கலைஞர் உரிமைத்தொகை கிடைக்கும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்தில் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், உரிமைத் திட்டத்தின் மூலம் மாதம் தோறும் மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் ரூ.1000/ பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். மேலும் திராட மாடல் அரசானது மக்கள் நலன் கருதியே அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி நிறைவேற்றி வருகிறது. இந்த அரசு மக்களின் வளர்ச்சிக்காகவே செயல்படும் அரசு என பொதுப்பணித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி. சரவணன் (கலசபாக்கம்), ஒ.ஜோதி (செய்யார்), மாநில தடகள சங்க துணை தலைவர் எ.வ.வே.கம்பன், எம்.எஸ்.தரணிவேந்தன், ஊராட்சி லலிதா செல்வராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர். மரு. இயக்குநர், செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, மாவட்ட குழு தலைவர் திருமதி. பார்வதி சீனிவாசன், தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு வாரியம்இரா.ஸ்ரீதரன், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி. ஆர்.மந்தாகினி (திருவண்ணாமலை), திருமதி. ம.தனலட்சுமி (ஆரணி), திருவண்ணாமலை ஒன்றிய குழு தலைவர் திருமதி. கலைவாணி கலைமணி, திருவண்ணாமலை ஒன்றிய குழு துணை தலைவர் ரமணன், திருவண்ணாமலை நகரமன்ற துணைத் தலைவர் ராஜங்கம், தச்சம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி லலிதா செல்வராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தந்தை பெரியார் பிறந்த நாள்

# "சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு"!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!



"தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் "சமூகநீதி நாளாக" கடைப்பிடிக்கப்படும் என்றும்; அப்பிறந்த நாள் அன்று "சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்" என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 6.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க;


தந்தை பெரியார் பிறந்த நாளான இன்று (17.9.2023) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் "சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு" நிகழ்ச்சி நடைபெறும். இதில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நாள் : 16.9.2023**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தலைவர்களின் தலைவர் தந்தை பெரியார்!



இன்று செப்டம்பர், 17 – தந்தை பெரியார் பிறந்த நாள்! பெரியார் மட்டும் பிறக்காமல், வாழ்நாள் முழுவதும் ஓய்வே இன்றிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, சுயமரியாதை – பகுத்தறிவுப் பரப்புரை மூலம் இடித்துரைக்காமல், தன்பெண்டு தன் சுற்றம் சோறு வீடு என்று சுயநலத்தை மட்டும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு, சொந்த ஊரிலேயே வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்டு இருந்திருந்தால், தமிழ்நாட்டின் பல தலைமுறைகள் எப்படி இருந்திருக்கும்? இந்தக் கேள்வியே நம்மைக் கிறு கிறுக்க வைக்கிறது.

இன்றைக்கு நாம், ஆறறிவின் பயனறிந்த மனிதர்களாக, வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வேறுபாடு காணும், பொது அறிவுள்ளவர்களாக, எதிலும் – ஏன், எப்படி, எப்போது, எதற்கு என்று கேள்வி மேல் கேள்வி தொடுத்து, அடிப்படை உண்மையைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுபவர்களாக நடமாடுவதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்களும், அவராலே உருவாக்கப்பட்ட அறிவுச் சுடர்களின் பகுத்தறிவுப் பரப்புரையே!

**"இத்தனை ஆண்டுகளிலும், நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர்; நான் கண்ட தலைவர், கொண்ட தலைவர், பெரியார் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது; அவர், நம் இதயத்திலே நிறைந்து, இதயபூர்வமான தலைவர் ! நமக்கெல்லாம் வழி காட்டியவர் பெரியார்!" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பற்றித் தமது இயல்பான எண்ணங்களைக் குவித்திருக்கிறார் !**

அது மட்டுமல்ல; 'பெரியார் அறிவார்' என்ற தலைப்பில் அண்ணா வரைந்துள்ள கருத்தோவியம், நம் சிந்தனையைச் செறிவூட்ட வல்லது :

"அவர் அறிவார்; தாசராக உள்ள தமிழர் தரணி ஆண்டவர் என்பதும்; தரணி ஆண்ட காலத்திலே தன்மானத்தை ஓம்பினர் என்பதும்; மானத்தையும் உரிமையையும் பெரிதெனக் கொண்ட தமிழரிடை சாதிப் பித்தம், வைதீக நெறி, அடக்கி ஆளும் ஆணவம், சுரண்டிப் பிழைக்கும் சூது ஆகியவை கிடையா என்பதும்; களத்திலே கடும் போரிடும் வீரர்கள் கபடரின் பொறியிலே வீழ்ந்தனர் என்பதும்; தமிழரின் இன்றைய நிலை தாழ்வுடையது, இடர் மிகுந்தது என்ற போதிலும், தங்கள் இனத்தைக் கெடுக்கும் கொள்கைகளை அவர்கள் நீக்கி விட்டால், களை எடுத்த வயலாவர் – விழித்தெழுந்த வேங்கை யாவர் என்பதும்; பெரியார் அறிவார்!".

இந்தக் கருத்தோவியத்தின் மூலம், தமிழின மீட்சிக்குத் தம்மை ஏன் பெரியார் அர்ப்பணித்துக் கொண்டார் என்பதற்கான அடிப்படையை அண்ணா அழகாக எடுத்துரைத்திருக்கிறார் !

**"பாராட்டிப் போற்றி வந்த பழைமை லோகம்,**
**ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார் !"**

என்று தலைவர் கலைஞர், தந்தை பெரியாரின் பெரும் போராட்டப் பணியையும், அதனால் நேரிட்ட விளைவினையும், விளக்கியிருக்கிறார்.

அறிஞர் அண்ணா, தந்தை பெரியாரை, தம் வாழ்நாளில் ஒரே தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தவர்; கலைஞர், இளமையில் ஈரோட்டுக் குருகுலத்திலே பயின்றதனால், பெரியாரை, குருவாக – பேராசானாக ஏற்றுக் கொண்டிருந்தவர். அதனாலேயே பிரச்சினைகளில் பெரியாரின் அணுகுமுறைகளைக் கைவரப் பெற்றிருந்தவர். கலைஞரைப் பொறுத்தவரை, அவருடைய செயல்பாடுகளில் தந்தை பெரியாரின் செல்வாக்கும், எழுத்தில் அறிஞர் அண்ணாவின் செல்வாக்கும், மிகுந்திருந்தது.

தந்தை பெரியார், அடிப்படையில் ஒரு கிளர்ச்சிக்காரர், புரட்சிக் காரர், கொண்ட கொள்கைகளில் தீவிரமான சிந்தனையும், பிடிவாதமான போக்கும், செயல் ஊக்கமும் கொண்டவர். தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சியில் இணைந்து, பொதுக் காரியங்களில் மிகுந்த நாட்டம் கொண்டு செயலாற்றினார். கதர், மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகிய மூன்றும் அவருடைய முயற்சிகளில் முன்னிலை பெற்றன.

தந்தை பெரியார், பிடிவாதக்காரர் என்பது இத்தரணி அறிந்தது.

'பிடிவாதக்காரன்' யார் என்பதற்கு, " தன் முயற்சிக்குத் தன்னையே பொறுப்புக் காரனாக்கிக் கொண்டு யாரையும் லட்சியம் செய்யாதவன்" என்று பெரியார் அவர்களே, தனிச் சிறப்பானதொரு இலக்கணத்தை வகுத்திருக்கிறார்.

கதர் ஆடைகளையே தாம் அணிந்ததுடன், தம் குடும்பத்தாரையும் அணிந்திடச் செய்து, கதர்த் துணிகள் விற்பனையையும் மேற்கொண்டார். கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்ட பெரியார், காந்தி அடிகளின் அறைகூவலை ஏற்று, தமக்குச் சொந்தமான ஐநூறு தென்னை மரங்களை அடியோடு வெட்டி வீழ்த்தினார். கள்ளுக்கடை மறியலில், தடையை மீறி, தாம் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், தமது துணைவியார் நாகம்மையையும், சகோதரியார் கண்ணம்மாளையும் மறியலில் ஈடுபடச் செய்தார்.

**தமது பொது வாழ்வின் தொடக்கத்திலேயே, தீண்டாமைக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்பதில் வேகம் காட்டினார், மேடைகளில் முழங்கினார். தீண்டாமை குறித்துப் பேசிய போதெல்லாம், பூகம்பச் சொற்களைப் பொழிந்தார்; எரி மலையாக நெருப்புக் குழம்பைக் கொட்டினார்.**

கேரள மாநிலம் வைக்கத்தில், ஊர் நடுவே இருக்கும் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும், தீண்டப்படாதோர் எனக் கருதப்பட்ட அவர்ணஸ்தர், அயித்தக்காரர் மற்றும் ஈழவர், ஆசாரியர், நெசவாளர் ஆகியோர், நடமாடவே கூடாது; நடமாடினால் கோயில் தீட்டுப்பட்டுவிடும் என்ற கொடுமைக்கு முடிவு கட்ட, தொடங்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு, தடையை மீறியதற்காகப் பெரியார் கைது செய்யப்பட்டு, சிறை ஏகினார். இறுதியில் போராட்டம் வெற்றி பெற்று, பெரியார் 'வைக்கம் வீரர்' என அறியப் பட்டார்.

காங்கிரஸைச் சேர்ந்த வ.வே.சு. அய்யர் சேரன்மகாதேவியில் தொடங்கிய குருகுலத்தில், பிராமணர் – பிராமணர் அல்லாதார்க்கு உண்ண – பிரார்த்திக்கத் தனித் தனி இடங்கள் என்ற வர்ணாசிரம வேறுபாடுகள் நடைமுறைப் படுத்தப்படுவதை அறிந்த பெரியார், போராட்டத்தையும், பிரச்சாரத்தையும் வேகப்படுத்தியதால், வ.வே.சு. அய்யர் பின்வாங்கினார்; பெரியார் போராட்டம் வெற்றி பெற்றது.

1920ல் நீதிக்கட்சி ஆட்சி ஏற்பட்டு, முற்போக்கான பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது. நீதிக்கட்சியின் செயலாக்கம் பெரியார் அவர்களின் கருத்தையும், கவனத்தையும் பெரிதும் ஈர்த்தது. நீதிக்கட்சி ஆட்சி குறித்து, பெரியார் தமது 'குடி அரசு' இதழில் :

**"ஜஸ்டிஸ் மந்திரிகள் வந்த பிறகு நமது மாகாணத்தில் இலவசக் கல்வி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 5 வயது முதல் 12 வயது வரை ஒவ்வொரு குழந்தையையும் கண்டிப்பாகப் படிக்க வைக்க வேண்டும்; இல்லாவிட்டால் பெற்றோர்க்குத் தண்டனை என்று சட்டமும் செய்திருக்கிறார்கள். அதன் மூலம், படிக்கும் லட்சக் கணக்கான பிள்ளைகளில் 100க்கு 99 பேர் பார்ப்பனர் அல்லாதவர்" என்றெழுதி, தம் நெஞ்சம் ஏற்றுக் கொண்ட நியாயமான காரணங்களுக்காக, நீதிக்கட்சிக்கு ஆதரவளித்தார்.**

வகுப்புவாரி உரிமை என்பது, நீதிக்கட்சியின் முக்கியக் கொள்கை. 1928 நவம்பரில், புதிய வகுப்புவாரி உரிமை ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்தக் 'கம்யூனல் ஜி.ஒ.,' எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்த போது, பெரியார் வகுப்புவாரி உரிமையை ஆதரித்து, "மந்திரி முத்தையா முதலியார் வாழ்க! வாழ்க! வாழ்க!" என்று, 'குடி அரசு' இதழில் தலையங்கம் எழுதி வரவேற்றார்.

சுயமரியாதை இயக்கத்தின் தலைவராக – நீதிக்கட்சியின் தலைவராக – திராவிடர் கழகத்தின் தலைவராக – தந்தை பெரியார் பொறுப்பேற்று; கறுப்புச் சட்டைப் பெரும்படை – இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு, வகுப்புவாரி உரிமையைக் காத்திடப் போராட்டம், சாதிப் பிரிவுகள் – சாத்திர சம்பிரதாய மூட நம்பிக்கைகள் தகர்ப்பு – சமூக நீதி, சமத்துவம், பெண்ணுரிமை காத்திட விடாமுயற்சி – என வாழ்நாள் முழுதும் அரும் பாடுபட்டு, 24.12.1973 அன்று, 94 ஆவது வயதில், தமது 'சுற்றுப் பயணத்தை' நிரந்தரமாக நிறுத்திக் கொண்டார்.

**சுயமரியாதை இயக்கம், நீதிக் கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை ஒரே இலட்சியத்தை நோக்கி மேலேற்றும் படி நிலைகள்! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோர், வாழையடி வாழையென வரும் திருக் கூட்டத்தார், ஒரே திருக்குடும்ப மரபினர் என்று காலம் தனது கையேட்டில் பொறித்துக் கொண்டிருக்கிறது !**

வாழ்க தந்தை பெரியார் !

★ ★ ★


**: கி.இராஜமாணிக்கம் :**

## சுயமரியாதைத் திருமணத்தை சட்டமாக்கிய அண்ணா!

# அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கி பெரியார் சமத்துவபுரம் கண்ட கலைஞர்!

## தந்தை பெரியார் பிறந்த செப்.17 யை 'சமூக நீதி நாள்' என அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்!

# வகுப்புரிமை!



ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றாக கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக் கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கைக் குணமாக இருக்குமோ, அது போலத்தான் எனக்கும் தோன்றுகிறது. மற்றும் அந்தத் தாய் தனது மக்களில் - உடல் நிலையில் இளைத்துப்போய், வலிவுக் குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போஜனையை விட எப்படி அதிகமான போஜனையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டுமென்று பாடுபடுவாளோ, அது போலத்தான் நான் வலுக் குறைவான பின் தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன்.

இந்த அளவுதான் நான் பார்ப்பனரிடமும்,மற்ற வகுப்புகளிடமும் காட்டிக் கொள்ளும் உணர்ச்சியும் ஆகும்.

**-தந்தை பெரியார்**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் மட்டுமல்லாமல் மனித குலத்திற்கே பகுத்தறிவைப் போதித்த பெருமகன்.

சுயமரியாதை கருத்தை முன்னெடுத்து தந்தை பெரியார் அவர்கள் களம் காணாவிடில் இன்று நம் நிலைமையை நினைத்து பார்க்கவே முடியாது!

தந்தை பெரியார் அவர்களின் கனவுகளை செயல்வடிவம் கொடுத்து சட்டமாக்கி அவரது கனவுகளை செயல்படுத்தி வருபவர்கள் திராவிட இயக்க வழித்தோன்றல்கள்.

தி.மு.கழக அரசு தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பில் அமைந்ததும், தந்தை பெரியாரின் போராட்டங்கள் வீண் போகவில்லை!

ஒவ்வொரு திட்டமும் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவே செயல்படுத்தப்பட்டன!

தற்போதும் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டும் வருகின்றன!

தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டங்களை செயல்படுத்திய

பேரறிஞர் அண்ணா,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திட்டங்கள்!

திராவிட இயக்க வழித் தோன்றலான நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

**சுயமரியாதைத் திருமணங்கள்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1967 ஆம் ஆண்டு முதன் முதலாக தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி மலர்ந்ததும், அண்ணா அவர்கள், சுயமரியாதைத் திருமணம் சீர்திருத்த திருமணங்கள் சட்டம் கொண்டு வந்து அதற்கான அங்கீகாரத்தினை அளித்து இந்த சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை தந்தை பெரியார் அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன் என்று அறிவித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்தார்.

செங்கல்பட்டு மாநாட்டில்1929 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி அன்று கொண்டு வந்த தீர்மானம் தான் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை அளிக்கும் திட்டம்,

இத் திட்டம் தந்தை பெரியார் அவர்களின் கனவுத் திட்டம்!

இத் திட்டத்தினை நனவாக்கும் வகையில் அதாவது 60 ஆண்டுகள் கழித்து, அதாவது 1989 ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக முதல்வராக கலைஞர் அவர்கள் பொறுப்பு வகித்த போது, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை அளிக்கும் வகையில் சட்டத்தினை இயற்றினார்.

தந்தை பெரியார் அவர்களின் நீண்ட கால கனவு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது!

அக் கனவினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தினை கொண்டுவந்தார்.

இந்த சட்டத்திருத்தத்திற்கு பல்வேறு எதிர்ப்புக் கிளம்பி நீதிமன்றங்களுக்கு வழக்குகள் சென்றாலும் அனைத்திலும் வெற்றி பெற்று அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக்கும் உரிமையை பெற்றுத் தந்து, தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியவர் கலைஞர்!

இதற்காக 2006 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றதும் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலம் என்ற சட்டத்திற்கு 29.8.2006 அன்று ஆளுநரிடம் ஒப்புதல் பெறப்பட்டது.

அதே ஆண்டு கலைஞர் அரசால் நியமிக்கப்பட்ட ஏ.கே. ராஜன் குழு வின் பரிந்துரையின் படி அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டன.

இதில் 249 மாணவர்கள் பயிற்சியில் சேர்ந்தனர். இந்த பயிற்சி மூலம் 207 பேர் பயிற்சியை முழுமையாக முடித்தனர்.

**தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்**

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றிய கலைஞர் அவர்கள், அனைத்துச் சாதியினரும், அனைத்து மதத்தினரும் ஒன்றாக வசிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது தான் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம்!




இந்த தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் 17.8.1998 அன்று மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே மேலக்கோட்டையில் அப்போது முதல்வராக இருந்த கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் ஆட்சியின் போது 100 வது சமத்துவபுரத்தை திருச்சி மாவட்டம் மல்லிகைப்பட்டியில் அப்போது துணை முதல்வராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்கள் 12.6.2009 அன்று திறந்து வைத்தார்.

இந்த திறப்பு விழாவில் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து கலைஞர் அவர்கள் காணொலியில் உரையாற்றுகையில்,

**தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்றார் நமது தேசத்தந்தை அண்ணல் காந்தி அடிகள்!**

**சாதி வித்தியாசம் என்பது கற்பிக்கப்பட்டதே ஒழிய வேறில்லை. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு சாட்சி சாதி வித்தியாசமே ஆகும். இது இன்னும் நிலைத்திருப்பது என்றால் இந்த நாடு மிருகப்பிரா யத்திலிருந்து மனிதப் பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத் தான் இது தெளிவாகக் காட்டுகிறது. என்று கூறி சாதி ஒழிந்த சமுதாயத்தை நான் உள்ளபோதே காண விழைகிறேன் என்றார் தந்தை பெரியார்.**

**தோழமைதான் சமத்துவத்தின் கனி, சமதர்மம் மணம், அதைக் காண வேண்டுமானால் சாதி தொலைய வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா,**

**அண்ணல் அம்பேத்கர் சாதி, மத பேதங்கள் இந்த மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் போராடினார்.**

**இந்த நிலையில் சாதி வேறுபாடுகளை முற்றிலும் மறந்து தமிழ் சமுதாயம் ஒரே சமுதாயமாக வாழ வேண்டும் என்கிற குரல், மெல்ல, மெல்ல, ஆனால், உறுதியாக வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கழக அரசால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்தான் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்.**

**1997 ஆம் ஆண்டில் நமது இந்திய திருநாட்டின் சுதந்திரப் பொன்விழா கொண்டாடப்பட்டபொழுது, ஆதி திராவிட மக்கள் உள்பட அனைத்துச் சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் அருகருகே ஒற்றுமையாக வாழும் வகையில் தலா 100 வீடுகளைக் கொண்ட சமத்துவபுரங்கள் தமிழகம் முழுவதும் அமைக்கப்படும் என முதலமைச்சர் என்ற முறையில் இந்தியாவிலேயே முதன் முதலாக என்னால் அறிவிக்கப் பட்டது.**

**அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே மேலக்கோட்டையில் 17.8.1998 அன்று நான் திறந்து வைத்தேன். அப்படி திறந்து வைத்தஅந்த விழாவில் பல்வேறு பிரிவு மக்களையெல்லாம் ஒன்றாக்குகின்ற சமத்துவம் முகிழ்க்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. என்பதை எண்ணிப்பார்த்து இதைப் பயன்படுத்துகின்றவர்கள் நல்ல தூய்மையை இங்கே வளர்க்கவும், அறிவினை இங்கே வளர்க்கவும் நல்ல பிள்ளைகளை வளர்த்து உருவாக்கவும் எங்களோடு இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.**

என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்று பேசினார்.

இந்தச் சமத்துவ புரங்கள் தமிழ்நாட்டில் 240 இடங்களில் அமைக்கப்படும் என்று கலைஞர் அவர்கள் திட்டமிட்டு சமத்துவபுரங்களை அமைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் (1.4.2023) கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவிடத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் கேரள மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆகியோர் உள்ளனர்.

அது மட்டுமல்லாமல் 1989 ஆம்ஆண்டு பெரியார் ஈ.வி.ஆர்.நாகம்மை இலவசக் கல்வித் திட்டத்தை கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

ஈ.வி.ஆர்.மணியம்மையார் நினைவு ஏழை பெண் திருமண உதவித் திட்டம் என்று ஏழை பெண் குழந்தைகளின் திருமணத்திற்காக ரூபாய் 10,000 ஆளிக்கும் வகையில் திருமண நிதி உதவித்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இன்றைக்கு இந்த பெண்களுக்கான திருண நிதி உதவித் திட்டம் தான் பல்வேறு வகையில் பரிணாமித்து இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.




பெண்களும் ஓதுவார்களாக நியமனம்!

தந்தை பெரியார் அவர்களின் சொந்த ஊரான ஈரோட்டினை மாநகராட்சியாக மாற்றிய பெருமையும் கலைஞர் அவர்களுக்கே உண்டு. இப்படி முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தார்.

**தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் புதுப்பிப்பு!**

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் திராவிட இயக்க வழித்தோன்றலான கழகத் தலை வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 மே 7 ஆம் தேதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்!

கடந்த காலஅ.தி.மு.க. ஆட்சியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தினை புறக்கணிக்கும் வகையில், சமத்துவபுரங்கள் பராமரிப்பின்றி வசதிகள் இன்றி, மக்கள் வாழத் தகுதியற்றதாக மாற்றிட வழி வகுத்தனர். அச் சமத்துவபுரங்களுக்கு அடிப்படை வசதிகள் எதனையும் அ.தி.மு.க. ஆட்சியினர் செய்யவில்லை,

இதனை அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் சமத்துவ புரங்கள் புதுப்பிக்கப்படும் என்று சட்டப்பேரவையில்அறிவித்தார். அந்த அறிவிப்பில்

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தை சமப்படுத்த போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவ புரங்கள் கட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் . அந்த சமத்துவபுரங்கள் சரியாக பராமரிக்கப்படாத அவல நிலையில் இப்போது இருக்கின்றன. அந்த சமத்துவபுரங்கள் உடனடியாக சீரமைக்கப்படும். அதுமட்டுமல்ல தமிழகத்தில் மேலும் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என்றும்அறிவித்தார்.

அறிவித்ததோடு நின்று விடாமல் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் 100 வீடுகள், பூங்கா, நூலகம் குழந்தைகள் காப்பகம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய புதிதாக புதுப்பிக்கப்பட்ட சமத்துவ புரத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இதே போன்று முதல்வர் அவர்கள் 240 சமத்துவபுரங்களையும் புதுப்பித்து நவீனப்படுத்திக் கொண்டு வருகிறார் தந்தை பெரியார் நினைவு சமத்துவ புரங்கள் மூலம் சதி, மதங்களற்ற ஒன்று பட்ட சமுதாய மக்களை ஒரே இடத்தில் அமர்த்தும் பணியில் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் முதல்வர்!

தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை கலைஞர் அகற்றினார் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம் கொண்டு!

இது தந்தை பெரியார் கனவு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னின்று செயல்படுத்திய திட்டம் இவ்விருவரின் கனவை நனவாக்கும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி காட்டி விட்டார்.

ஆம், 14.8.2021 அன்று சென்னை கபாலீசுவர் கற்பகம்பாள் திருமணமண்டபத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருக்கோயில்களில் பணிபுரிவதற்காக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின் கீழ் 24 பயிற்சி பெற்ற அர்ச்கர்களுக்கு திருக்கோயில்களில் பணிபுரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்.

அதே போன்று கோவில் கருவறைக்குள்ளும் பெண்கள் போகும் வகையில் முதல்வர் அவர்கள் முன்னெடுப்பை எடுத்துள்ளார். 29 ஒதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்தப் பணி ஆணை பெற்றவர்களின் பட்டியல் பிரிவில் 5 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் 6பேர், பிற்படுத்தப்பட்டோரில் 12 பேர், பொதுப் பிரிவைச் சேர்ந்தவர் ஒருவர் இடம் பெற்றது மட்டுமின்றி வரலாற்றில் பதிவு செய்யத் தக்கவையில் பெண் ஓதுவார்களுக்கும் பணி நியமனை ஆணையை வழங்கினார் முதல்வர்.

நாட்டிலேயே பெண்கள் ஓதுவராக நியமிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். அந்த வகையில் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் தான்தான் வழிகாட்டு என்பதை முதல்வர் அவர்கள் நிருபித்து காட்டியிருக்கிறார்.

பெண் ஓதுவார்களில் காஞ்சனா என்ற பெண் ஓதுவார் ஒருவருக்கு தாம்பரம் அருகே மாடம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை கோயிலில் ஓதுவராக நியமனம் செய்யப்பட்ட பணி ஆணையை முதல்வர் தனது திருகரத்தால் வழங்கினார்.

இவை எல்லாம் தந்தை பெரியார் கனவு இன்றைக்கு திராவிட இயக்க வழித்தோன்றல்கள் மூலம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சமூக சமதர்ம கோட்பாடுகள் இன்று அனைத்து மக்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

**தந்தை பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாள்!**

தந்தை எவ்வழியோ தனயனும் அவ் வழியே என்பதற்கேற்ப, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் அடியொற்றி செயல்படுகிறார்.

தமிழக மக்கள் எவராலும் மறக்க முடியாத மனிதர் தந்தை பெரியார்.

அப்படிப்பட்ட மாமனிதர் தந்தை பெரியார் அவர்களுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில், தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 சமூக நீதி நாளாக கொண்டாடப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

**அந்த அறிவிப்பில்,**

**...அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூக நீதி நாள்' ஆகக் கொண்டாடுவது என்று தமிர்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.**

**தந்தை பெரியாரின் அறிவு வெளிச்சத்தில் வளர்ந்த நாம் நமது நன்றியின் அடையாளமாக இந்த நாளைக் கொண்டாடுவோம், சாதிய ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளுவோம், பெண்களைச் சமநிலையில் மதிப்போம், அந்த எண்ணத்தை விதைக்கும் விதமாக இந்த உறுதிமொழியைத் தயாரித்துள்ளோம். ஆண்டுதோறும் செப்டம்பர் 17 ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் கீழ்க் கண்ட உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்வோம்.**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும்,**

**யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியும்,**

**எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன்!**

**சுயமரியாதை ஆளுமைத் திறனும் பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்படுகள் அமையும்**

**சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்.**

**மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்**

**சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்"**

**என்ற உறுதி மொழியையும் வடித்தெடுத்தெடுத்துக் கொடுத்துள்ளார் முதல்வர்!**

**வைக்கம் போராட்டம்**

**தந்தை பெரியார் முன்னெடுத்த போராட்டங்களில் மிக முக்கியமானது வைக்கம் போராட்டம் ஆகும். 'வைக்கம் வீரர்' என்றே பெரியார் அவர்கள் அழைக்கப்பட்டார்.**

**இந்த வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வைக்கம் போரட்ட நினைவுத் தூணுக்கும் அங்குள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கும் மரியாதை செலுத்தினார்.**

கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் இந்த சூளுரையை நாம் நெஞ்சில் ஏந்தி, ஒற்றுமையுடன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, மதவாத சக்திகள் மீண்டும் கோலோச்ச நினைப்பதை முறியடிக்க தந்தை பெரியார் பிறந்த இந்நாளில் உறுதியேற்போம்!

# வருணாசிரமம்!




வருணாசிரம தர்மத்தின் மூலமாகத்தான் நமது நாட்டில், தீண்டாமைக் கொள்கை அமலில் இருந்து வருகிறதே யொழிய,வருணாசிரமம் இல்லாவிட்டால், தீண்டாமைக் கொள்கை பரவ மார்க்கமே கிடையாது.வருணாசிரமத் தர்மம் என்கிற ஓர் உடல் இல்லாவிட்டால்,தீண்டாமை என்கிற உயிருக்கு ஆட்டம் இல்லை.

வருணாசிரமத்தின் கருத்து என்ன ? ஒருவன் மேல் சாதி, ஒருவன் கீழ்ச் சாதி; ஒருவன் பாடுபடுவதற்காக இருக்க வேண்டியவன்; ஒருவன் அந்த உழைப்பை அனுபவிக்க வேண்டியவன்; இதைத் தவிர வருணத்தின் தத்துவம் என்ன?

**-தந்தை பெரியார்**

# எதிர்பார்ப்பு!



நான் ஒரு பகுத்தறிவுவாதி.நான் பகுத்தறிவு வாதி என்பது மட்டுமல்லாமல், நாட்டு மக்களிடையே நிலவி வரும் மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்கிற சீர்திருத்த வாதி. ஆனதால் எனக்கு மதம் - கடவுள் - புராணப் பற்றோடு, நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இலக்கண இலக்கியப் பற்று கிடையாது.

மனிதப் பற்று, சமுதாயப் பற்று ஒன்றுதான் எனக்கு உண்டு.அந்தச் சமுதாய இழிவு ஒழியவும், மானமற்ற இழிநிலை போகவுமே நான் தொண்டாற்றி வருகிறேன். இதன் மூலம் நான் எதிர்பார்ப்பதெல்லாம், நம் சமுதாய மக்கள் மற்ற உலக மக்களைப்போல, இழிவற்று,மானத்தோடு, அறிவோடு நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் !

**-தந்தை பெரியார்**

# மக்களுக்காக போராட்டம் நடத்திய பெரியார்!

## பேரறிஞர் அண்ணா!



சமூக நீதியற்ற தன்மைகளுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்ட மக்களுக்காகத் தமிழ்நாட்டில் போராட்டத்தை நடத்தியவர் பெரியார் (ராமசாமி) அவர்களே. அதேபோன்று தெனாலியில் முதலில் குரல் எழுப்பியவர் ராமசாமி சவுதரி என்பவர் ஆவார். இந்த இருபெரும் சமூக சீர்திருத்தத் தலைவர்களுக்கும் ஒரே பெயர் பொருந்தியிருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. கடவுளின் அவதாரமென்று கூறப்படுகிற ராமசாமி யையும் அதையொட்டிய கருத்துக்களையும் நிறுவனங்களையும் எதிர்த்து ராமசாமி என்ற பெயருள்ள இரு பெரியார்களும் கண்டனமாரிகளைப் பொழியும் பிரச்சாரங்களைச் செய்யும் தகுதி பெற்றவர்களாகியுள்ளனர்.

தமிழ்நாட்டில் நாங்கள் இந்தப் பிடிவாத மான மக்களை எங்களுடைய கருத்துக்களுக்கு ஏற்ப வளைத்துக் கொண்டு வருவதற்கு இருபதாண்டுக் காலமாக விவாதித்து வந்திருக்கிறோம்; இறுதியாக நாங்கள் வெற்றி பெற்றோம். பூமியில் உள்ள தீமையை ஒழிக்கக் கடவுள் 10 அவதாரங்களுக்குக் குறையாமல் எடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனாலும் தீமைகள் முழுவதும் ஒழிந்தபாடில்லையே! மனிதர்களாகிய நமக்குத்தான் தீமைகளுக்கு எதிராகப் போரிட்டு. அதை வேரோடு ஒழித்துக்கட்டும் மிக உயர்ந்த கடமை ஏற்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சுயமரியாதைக் காரர்களாகிய எங்களில் சிலர் சுயமரியாதைத் திருமணம் என்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்த, போலீஸ் உதவியை நாட வேண்டியதாய் இருந்தது. அந்தத் திருமணங்கள் குருக்கள் இல்லாமலும். மந்திரங்கள் சொல்லப்படாமலும், ஓமத் தீ இல்லாமலும் நடத்தப்படும் திருமணங்கள் ஆகும்.

ஒரு கிராமத்தில் பெரியார் (ராமசாமி) அவர்களும் நானும் ஒரு சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைக்கச் சென்ற போது, போலீஸ் அதிகாரி ஒருவர் எங்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படிச் சொல்லி அனுப்பினார் நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றபோது. எங்களைக் கைதுசெய்யவோ. காவலில் வைக்கவோ அழைக்கவில்லை யென்றும். சனாதனிகளால் தொல்லை நேராது எங்களைப் பாதுகாக்கவே அழைத்ததாகவும் அந்தப் போலீஸ் அதிகாரி கூறினார் ஆனால் இன்றோ தமிழ்நாடெங்கும் அத்தகைய சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. அவைகள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியான மசோதாவொன்று நான் கொண்டுவந்து நிறைவேற்றி விட்டேன்."

**முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா**

(ஆந்திராவிலுள்ள தெனாலியில் கவிராசு ராமசாமி சவுதரிஆவுல கோபால கிருஷ்ண மூர்த்தி "பவ விகாச கேந்திர"த்தை 29.1.1968 அன்று திறந்து வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை)

# கல்வி!



கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியம் எல்லாம், ஒருவன். தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு

வாழ்வதற்குத் தகுதிப் படுத்துவது என்பதே ஆகும். அல்லது, உலகில் நல் வாழ்க்கை வாழத் தகுதி உடையவனாக்குவது என்பதாகும். அதாவது, ஒவ்வொரு காரியத்துக்கும் மற்றவர்களை

எதிர் பார்த்து, மற்றவர்கள் ஆதிக்கத்தில் இருந்தோ அல்லது தனக்கு மற்றவர்கள் வழிகாட்டக் கூடிய நிலையிலோ மனிதன் இல்லாமல் சுதந்திரத்தோடும் சுய அறிவோடும் வாழத் தகுதி உடையவனாக வேண்டும்.

**-தந்தை பெரியார்**

# பெரியாரைக் குறிப்பிடாமல் பேச முடியாது!



## முத்தமிழறிஞர் கலைஞர்

பெரியாருடைய பள்ளியிலே சட்டாம் பிள்ளையாக இருந்து நம்மை வழி நடத்தியவர் பேரறிஞர் அண்ணா! அந்தக் கல்லூரியிலே படித்த மூத்த மாணவர்களிலே ஒருவன் நான். நான் தான் இன்றைக்கு உங்களையெல்லாம் சந்திக்கிறேன் என்றால் எப்படி? எனக்குப் பகுத்தறிவு பாடம் போதித்த பெரியாரை மறவாமல் என்னுடைய உள்ளத்திலே சுயமரியாதை உணர்வை விதைத்த அய்யாவை மறவாமல், அந்த பெரியார் தந்த அருமையான கொள்கைகளையெல்லாம் நாட்டிலே பரப்ப வேண்டும் என்ற அந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்கிறேன்.

இன்று உங்களுக்குக் கூட ஒரு வியப்பாக இருக்கும் என்ன கருணாநிதியை அழைத்து கூட்டம் போட்டால் அவர் தேர்தலைப் பற்றி பேசுவார், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்று கேட்பார் என்று எண்ணினால் பெரியாரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே! அண்ணாவைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே! என்று நீங்கள் கருதுவீர்களே யானால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், கருணாநிதி யாரைப் பற்றிப் பேசினாலும், யாரைப் பற்றி புகழ்ந்துரைத்தாலும், யாரைப் பற்றி கவிதை பாடினாலும் அதற்கெல்லாம் மூலவித்தாக இருப்பது சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கம். தந்தை பெரியாருடைய போதனைகள், அறிஞர் அண்ணாவினுடைய அறிவுரைகள் இவைகள் இல்லாமல் கருணாநிதியால் பேச முடியாது!


# பெரியாரிடம் உணர்வு பெற்றேன்!


## இனமானப் பேராசிரியர்



நான் மாணவனாக இருந்தபோது என்னுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதியுமாறு உணர்வுகளை ஏற்படுத்தியவர் தந்தை பெரியார் அவர்கள். நான் தமிழ்ப் பற்றுள்ள மாணவன். தமிழனாக உணர்வு பெற்ற மாணவன் என்ற நன்மதிப்பைப் பெறுவதற்குக் காரணம் தந்தை பெரியார் அவர்கள் ஊட்டிய தன்மான உணர்வும் பகுத்தறிவுச் சிந்தனையுமே ஆகும். அந்த உணர்வுகளிலே ஏற்பட்ட பற்றினால், என்னை நான் ஓர் அளவுக்கு அதில் ஈடுபடுத்திக் கொண்டவன் என்ற முறையில் பெரியாருடைய நினைவு பெரியாருடைய கொள்கை, சிந்தனை மக்களிடத்திலே இடம் பெற்றதாக வேண்டும் என்று விரும்புகிறவனாகவே நான் இருந்தேன்.


# நான் யார்!






(ஈ.வெ.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தை திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தைப்போல் ஞானமும் அறிவுமுள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன்)

# வெங்காயம்!



நான் கடவுளையும், மதத்தையும், அவை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையுமே வெங்காயம் என்றுதான் சொல்லுவேன்.

வெங்காயம் என்றால், வித்து இல்லாதது, வெறும் சதை என்பது அச்சொல்லின் அர்த்தம். வெங்காயம், வெறும் காயம்; உயிரற்ற உடல்; விதை இல்லாததால், உரிக்க உரிக்க, தோலாகவே சதையாகவே வந்து, முடிவில் சூனியமாய், விதை இல்லாத தன்மை உடையதாய் முடிவது. ஆகவே விதை வித்து இல்லாத காரணத்தால்தான், அதற்கு வெங்காயம் என்று பெயர்!

**-தந்தை பெரியார்**


தி.மு.க.
முப்பெரும் விழா
2023
நாள் : 17.9.2023, ஞாயிறு மாலை 5.00 மணி
இடம் : பள்ளிகொண்டா, வேலூர்.
எழுச்சியுரையாற்ற வருகை தரும்
கழகத் தலைவர்
அவர்களையும்
கழகப் பொதுச்செயலாளர்
துரைமுருகன் அவர்களையும்
இளைஞர் அணிச் செயலாளர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும்
வருக. வருக.. என அன்புடன் வரவேற்கிறோம்.
இவண்
இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் / மாவட்ட செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.
ARASU ARTS


கழகத்தின் பவளவிழா
2024 வெற்றிக்கு அச்சாரமிடும் முப்பெரும் விழா
செப் - 17, வேலூர்
கலைஞர் 100
1924 - 2023
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திராவிட நாயகன்
அவர்களே! வருக.. வருக...
டி.ஆர்.பி.ராஜா Ph.D.,
மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
தமிழ்நாடு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்
மின்னும் மன்னை
DMK
IT WING


வேலூர் நாடாளுமன்ற தொகுதியில்
தி.மு.க 75-ஆம் ஆண்டு பவள விழா
முப்பெரும் விழாவிற்கு
வருகைதரும்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களே... வருக.. வருக..
இவண்... D.M.கதிர்ஆனந்த் MBA.,(USA) M.P.,
கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் - வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்


17-09-2023 ஞாயிறு மாலை 5.00 மணி
பள்ளிகொண்டா - வேலூர்
தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா
75வது ஆண்டு கழக பவள விழா
கழக முப்பெரும் விழா
தலைமை :
கழக பொதுச்செயலாளர்
மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளம் (ம) கனிமவள சுரங்கத்துறை அமைச்சர்
துரைமுருகன்
வரவேற்புரை :
A.P.நந்தகுமார் MLA
மாவட்ட கழக செயலாளர்
விருது மற்றும் பரிசுகள் வழங்கி
சிறப்புரையாற்ற வருகைதரும்...
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்...
கழகத் தலைவர்
அவர்களையும்
மற்றும் தலைமைக்கழக நிர்வாக பெருமக்கள் அனைவரையும்
வருக ! வருக !! என அன்புடன் வரவேற்கும்
ப.கார்த்திகேயன் MLA
மாநகர கழக செயலாளர் - முன்னாள் மேயர்
தி.அ.முகமதுசகி Ex.MP
த.தணிக்கைகுழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர்
D.M.கதிர்ஆனந்த் MP
கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர்
சுஜாதா ஆனந்தகுமார்
மேயர் - வேலூர் மாநகராட்சி, மாநகர மகளிரணி அமைப்பாளர்
R.P.ஏழுமலை
தலைமை செயற்குழு உறுப்பினர்
சூரி (எ) அ.கோவிந்தன்
மாநகர அவைத்தலைவர்
A.R.முன்னாஷெரீப்
மாநகர துணைச்செயலாளர்
Y.தேவநேசன்
மாநகர துணைச்செயலாளர்
தங்கமணி ஆனந்தன்
மாநகர துணைச்செயலாளர்
நா.அசோகன்
மாநகர துணைச்செயலாளர்
G.வன்னியராஜா
காட்பாடி வடக்கு பகுதி செயலாளர்
M.சுனில்குமார்
து.மேயர், காட்பாடி தெற்கு பகுதி செயலாளர்
N.பரமசிவம்
காந்திநகர் பகுதி செயலாளர்
RPE.சசிகுமார்
சத்துவாச்சாரி வடக்கு பகுதி செயலாளர்
M.A.கணேஷ்ஷங்கர்
சத்துவாச்சாரி தெற்கு பகுதி செயலாளர்
எஸ்.தயாள்ராஜ்
சைதாப்பேட்டை பகுதி செயலாளர்
VGK.சுந்தரவிஜி
சலவன்பேட்டை பகுதி செயலாளர்
R.சத்தியமூர்த்தி
வேலப்பாடி பகுதி செயலாளர்
G.பாலமுரளிகிருஷ்ணா
சங்கரன்பாளையம் பகுதி செயலாளர்
C.M.தங்கதுரை
அல்லாபுரம் பகுதி செயலாளர்
R.K.ஐயப்பன்
தொரப்பாடி பகுதி செயலாளர்
தி.அ.முன்வர்பாஷா
கஸ்பா பகுதி கழக செயலாளர்
B.முருகப்பெருமாள்
சேண்பாக்கம் பகுதி செயலாளர்
வேலூர் மாநகர திமுக


தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா
75வது ஆண்டு கழக பவள விழா
கழக முப்பெரும் விழா
தலைமை :
கழக பொதுச்செயலாளர்
மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளம் (ம) கனிமவள சுரங்கத்துறை அமைச்சர்
துரைமுருகன்
விருது மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்ற வருகைதரும்...
கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு
முதல்வர்
அவர்களே வருக... வருக...
A.P.நந்தகுமார் MLA
மாவட்ட கழக செயலாளர்
ப.கார்த்திகேயன் MLA
வேலூர் மாநகர கழக செயலாளர் - முன்னாள் மேயர்
தி.அ.முகமதுசகி Ex.MP
த.தணி.கு.உ. மாவட்ட அவைத்தலைவர்
D.M.கதிர்ஆனந்த் MP
மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர்
அன்புடன்...
சுஜாதா ஆனந்தகுமார் MA, B.Ed.,
மேயர் - வேலூர் மாநகராட்சி, மாநகர மகளிரணி அமைப்பாளர்
வேலூர் மாநகராட்சி
சிட்டி கலர்ஸ், வேலூர் - 84388 03922.


தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா
75வது ஆண்டு கழக பவள விழா
கழக முப்பெரும் விழா
தலைமை :
கழக பொதுச்செயலாளர்
மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளம் (ம) கனிமவள சுரங்கத்துறை அமைச்சர்
துரைமுருகன்
விருது மற்றும் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்ற வருகைதரும்...
கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு
முதல்வர்
அவர்களே வருக... வருக...
A.P.நந்தகுமார் MLA
மாவட்ட கழக செயலாளர்
ப.கார்த்திகேயன் MLA
வேலூர் மாநகர கழக செயலாளர் - முன்னாள் மேயர்
தி.அ.முகமதுசகி Ex.MP
த.தணி.கு.உ. மாவட்ட அவைத்தலைவர்
D.M.கதிர்ஆனந்த் MP
மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர்
சுஜாதா ஆனந்தகுமார் MA, B.Ed.,
மேயர் - வேலூர் மாநகராட்சி, மாநகர மகளிரணி அமைப்பாளர்
RPE.சசிகுமார்
சத்துவாச்சாரி வடக்கு பகுதி செயலாளர்
M.A.கணேஷ்ஷங்கர்
சத்துவாச்சாரி தெற்கு பகுதி செயலாளர்
எஸ்.தயாள்ராஜ்
சைதாப்பேட்டை பகுதி செயலாளர்
VGK.சுந்தரவிஜி
சலவன்பேட்டை பகுதி செயலாளர்
G.பாலமுரளிகிருஷ்ணா
சங்கரன்பாளையம் பகுதி செயலாளர்
தி.அ.முன்வர்பாஷா
கஸ்பா பகுதி கழக செயலாளர்
பகுதி கழக திமுக - வேலூர் மாநகரம்
சிட்டி கலர்ஸ் - 84388 03922.

## 1.06 கோடி மகளிர்களுக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கி

# பெண்ணுரிமையின் காவலராக வரலாற்றில் வடிவெடுத்துவிட்டீர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பேராசிரியர் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!



**சென்னை, செப்.17-**

**பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்தை தொடங்கி வைத்தது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இனமானப்பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் எழுதியுள்ள கடிதத்தில், "1.06 கோடி மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வழங்கி வரலாற்றில் பெண்ணுரிமைக் காவலராக வடிவெடுத்து விட்டீர்கள்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அ.அன்புச்செல்வன் அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

அன்புச் சகோதரர்

**தலைவர் ஸ்டாலின் அவர்களே,**

அன்பான வணக்கம்,

நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் அதி முக்கியமான கொள்கைகளில் ஒன்று பெண்கள் முன்னேற்றம் மற்றும் அவர்களின் கல்வி.

"பெண் ஏன் அடிமையானாள்" என்ற தந்தை பெரியாரின் நூல் பெண்களின் முன்னேற்றத்தை வலியுறுத்துவதாகும். ஓர் பெண் முன்னேறினால் ஒரு குடும்பம் மட்டும் முன்னேறுவதில்லை, அவரை சார்ந்த சமுதாயமே முன்னேறுவதற்கு ஏதுவாகும்.

இவ்வகை கருத்தின் தாக்கத்தை உணர்ந்த தாங்கள் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை அறிவித்து இருந்தீர்கள். அவ்வறிக்கைகள் வெறும் காகிதப் பூவாக இருக்கும் என்று ஆருடம் கூறியவர்களின் கூற்றை தவிடு பொடியாக்கி 1.06 கோடி மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்கி வரலாற்றில் பெண்ணுரிமை காவலராக வடிவெடுத்து விட்டீர்கள்.

இன்று அறிஞர் அண்ணா பிறந்த காஞ்சியில் கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தினை துவங்கியது சாலச்சிறப்பு.

மகளிர் வாழ்வு மேம்பட மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், கல்லூரி பெண்களுக்கு புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், முதல் அமைச்சரின் காலை உணவுத் திட்டம், போன்ற முத்தான திட்டங்கள் தங்களின் ஆட்சிக்கு அச்சாரமாக விளங்குபவை.

இந்தியா முழுவதும் உள்ள பெண்கள் தாங்கள் தங்களது மாநிலத்தின் முதல்வராக இல்லையே என்று ஆதங்கப்படுவர்.

சென்ற பத்தாண்டுகளாக நிர்வாக சீர்கேட்டை உருவாக்கி கடும் நிதி நெருக்கடியில் தமிழகம் சிக்கித்தவித்த பொழுதும் சீரிய நிர்வாகத்தை திறம்பட நடத்தி கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை தரவுகளின் அடிப்படையில் வழங்குவது கண்டு பலரும் பெருமிதம் கொள்கின்றனர். அதுவும் யாருடைய தலையீடும் இல்லாமல் மக்களை நேரிடையாக வங்கிகளின் வழியேபலன் சென்றடைவது மிகவும் முக்கிய மானது, DIGITAL TAMILNADU ஆக இத்திட்டம் தமிழகத்தை மாற்றியுள்ளது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் போன்றவர்கள் தமிழகத்திற்காக கண்ட கனவுகளை எண்ணங்களை நிறைவேற்றி வருவதால் தமிழகத்தின் தவப்புதல்வனாக திகழ்கிறீர்கள்.

வாழ்க, வெல்க தங்களின் சீரிய தமிழர் தொண்டு.

நட்புடன்,
**அ.அன்புச்செல்வன்**
15 - 09- 2023.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அ.அன்புச்செல்வன் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

# பொருளியல் மேம்பாடும், சமூக மேம்பாடும்!



**பொ**ருளாதாரத் துறையில் மேல் வருவதற்குச் சமூகத் துறையில் உள்ள கட்டுப்பாடுகளை உடைக்கச் செய்தால் ஒழிய வேறு வழியில் இந்திய மக்கள் பொருளாதாரத் துறை சீர்படுத்தப்படுமென்பது சிறிதும் முடியாத காரியம் ஆகும்.

பொருளாதாரச் சமத்துவத்தால் சமுதாய பேதாபேதங்கள் அகன்று விடும் என்பது, மேல் நாடுகளுக்குச் சற்றுப் பொருத்தமானதாய் இருக்கலாம். மேல் நாட்டு மக்கள் எல்லோருமே ஒரே மதத்தைத் தழுவியவர்கள் ஆவார்கள். எனவே இயல்பிலேயே அங்கு சமுதாயத்தில் பேதாபேதம் இல்லாமல் இருந்து வருகிறது.

நம் நாட்டு நிலை அப்படி இல்லை. (இங்குப் பிறவியிலேயே பேதாபேதம் கற்பிக்கப்பட்டு, மக்கள் பல சாதிகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள்.)

**-தந்தை பெரியார்**

## வேலூரில் கழக முப்பெரும் விழா!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்புமிகு வரவேற்பு!

## மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*வேலூர், செப். 17-*

*கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வருகையை முன்னிட்டு வேலூர் மாநகரக் கழகச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா கந்தநேரி அருகே நடைபெற உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, தி.மு.க. பவளவிழா, கழக முப்பெரும் விழாவில் பங்கேற்க கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இன்று (17.09.2023) வருகை புரிய உள்ளார்.*

*இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகரக் கழகம் சார்பாக மாநகர கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட டெபிட் கார்டு வெறும் கார்டு மட்டுமல்ல

# மகளிர் வாழ்க்கையை மாற்றப் போகின்ற துருப்புச் சீட்டு!

## சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் திட்டத்தை துவக்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,செப்.17–**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட டெபிட் கார்டு வெறும் கார்டு மட்டுமல்ல மகளிர் வாழ்க்கையை மாற்றப்போகின்ற துருப்புச்சீட்டு என்று சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் திட்டத்தை துவக்கி வைத்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**இதுகுறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில், கலைஞரின் நூற்றாண்டில், ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட'த்தை காஞ்சிபுரத்தில் இன்று துவக்கி வைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் அனைவரும் இங்கு நிகழும் ஒரு நெகிழ்ச்சியான மகிழச்சியான தருணத்திலே இருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம். இங்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்த விழா, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு விழா.

தமிழ்நாட்டு வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடிய நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த ஒரு மிக முக்கியமான ஒரு வாக்குறுதி.

**வாக்குறுதியை நிறைவேற்றிய தலைவர்!**

இரண்டு ஆண்டுகளாக இந்த வாக்குறுதி எப்போது வரும் என்று ஒட்டுமொத்த தமிழகமும், இல்லை ஒட்டு மொத்த இந்தியாவும் காத்திருந்த நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி.

அந்த வாக்குறுதியை இன்று நம்முடைய தலைவர் அவர்கள் இன்று நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மகளிருடைய ஒட்டுமொத்த எதிர்பார்ப்பும் இன்று நிறைவேறிருக்கிறது.

அண்ணாவின் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய தொகுதி, அவர் நின்று வென்ற தொகுதி இந்த சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தத் திட்டத்தை நான் இன்று துவக்கி வைக்கின்றேன். தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மகளிர் இந்தத் திட்டத்தினால் பயன்பெறப் போகிறார்கள்.

இந்தத் திட்டம் தமிழ்நாட்டு மகளிர் முன்னேற்றத்தில் பெரும் பங்காக அமைய இருக்கின்றது. இன்றைக்கு உங்களுடைய கைகளில் வழங்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் திட்டத்துக்கான அந்த டெபிட் கார்டு வெறும் கார்டு மட்டுமல்ல, உங்களுடைய வாழ்க்கையை மாற்றப் போகின்ற துருப்புச் சீட்டு என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்தத் திட்டம் இன்றைக்கு இந்திய ஒன்றியத்தையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கெல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்னவெல்லாம் செய்தாரோ அவருடைய வழியில் அவரைத் தொடர்ந்து இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எனவே தான் இந்த அரசை அனைவரும் திராவிட மாடல் அரசு என்று பெருமையாகக் கூறுகின்றோம்.

பெண்ணுரிமை, மகளிர் முன்னேற்றம் என்று வருகின்ற பொழுது மகளிர் முன்னேற்றம் எந்தெந்த வழியில் எல்லாம் தடுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி தந்தை பெரியார் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியுள்ளார்கள். மகளிர் முன்னேற்றம் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று, பெரியார் சொன்னார். இந்த மூன்று தடைகளையும் நீக்கினால், மகளிர் சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமை ஏற்படும் இதுதான் தந்தை பெரியார் அவர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்.

**பெண் அடிமைத் தனம் பற்றி தந்தை பெரியார்!**

மகளிர் முன்னேற்றத்திற்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் என்னென்ன? தந்தை பெரியார் அவர்களே சொன்னார். பணக்காரன், ஏழை என்ற அந்த அடிமைத்தனத்தை விட, மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற அந்த அடிமைத்தனத்தை விட, முதலாளி, தொழிலாளி என்ற அந்த அடிமைத்தனத்தை விட மிக மிக மோசமானதுதான் இந்த ஆண் பெண் அடிமைத்தனம் என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்வார்.




அதிலும் கொடுமையானது, விதவை என்று சொல்லி நடத்தப்படுகின்ற அந்தக் கொடுமை. அதோடு மட்டுமல்ல மகளிர் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது, பெண்களுக்குப் படிப்பு தேவையில்லை, குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும்தான் பெண்களுக்கான வேலை. இப்படித்தான் நமது சமுதாயம் இருந்து வந்தது.

இவை எல்லாவற்றையும் எதிர்த்துப் பெண்களுக்கான அந்த உரிமைக் குரலைக் கொடுத்ததுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். குழந்தைத் திருமணத்திற்கு எதிராக அன்றைக்கு மட்டுமல்ல இன்றைக்கும் குரல் கொடுத்துக் கொண்டிருப்பது தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

**சொத்தில் பெண்களுக்கு சம உரிமை!**

சட்டரீதியாக, பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை என்ன? ஆண்களுக்கு மட்டும்தான் குடும்பத்தில் இருக்கக் கூடிய சொத்தில் உரிமை இருந்தது. பெண் பிள்ளைகளுக்குச் சொத்திலே உரிமை கிடையாது என்ற அந்த நிலைதான் சட்டரீதியாக இருந்தது.

ஆனால், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொத்திலே பெண்களுக்குச் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை 1989ஆம் ஆண்டு அதை நிறைவேற்றினார்.

அவர் நிறைவேற்றிய இந்தச் சட்டம் 30 ஆண்டுகளுக்கு பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. எப்போது? கலைஞர் நிறைவேற்றி முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தில் நிறைவேற்றினார்கள்.

இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே சம உரிமை கிடைத்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும்.

அடுத்ததாகப் பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக்கூடிய முட்டுக்கட்டைகள் என்னென்ன? முதலில் பொருளாதார ரீதியில், பெண்களுக்கு நிலை என்னவாக இருக்கிறது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பெண் சிறுமியாக இருக்கும் பொழுது குழந்தையாக இருக்கும் பொழுது தனது அப்பாவை, அம்மாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காக, கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வயது முதிர்ந்த பின்பு, முதிர்ந்த காலத்தில் பணத்திற்காகத் தனது மகனையோ, மகளையோ எதிர்பார்க்க வேண்டும். இப்படிதான் பெண்களுடைய நிலைமை இருந்தது.

**திராவிட மாடல் அரசு பெண்களுக்கு முக்கியத்துவம்!**

இந்த நிலைமை மாறி, மகளிர் ஆண்களுக்குச் சமமாக வளர வேண்டுமென அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பிய கல்வியைக் கற்க வேண்டும். தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற வேலையில் சேர வேண்டும். பணியாற்ற வேண்டும். எனவேதான் நம்முடைய திராவிட மாடல் அரசு பெண்கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

அரசு பள்ளியில் படித்துக் கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்கனவே புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் அந்த மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை அளிக்கப்படுகின்றது.

படிப்பிற்காக அல்லது வேலைக்காக மகளிர் பயணம் செய்வதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப்பின் இட்ட முதல் கையெழுத்து மகளிர்க்குக் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம்.

இதுவரை நம்முடைய கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களில் முதன்மையான திட்டம் என்று சொல்லக்கூடிய திட்டம்தான் இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்.

கலைஞருடைய நூற்றாண்டில் நிறைவேற்றி இருக்கக் கூடிய ஒரு முத்தாய்ப்பான ஒரு திட்டம். இந்தத் திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் வைத்திருக்கக்கூடிய பெயர் மிக மிக முக்கியமானது. இது மகளிர் உதவி தொகைத் திட்டம் அல்ல இது மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கின்றார்.

உங்களுடைய உழைப்பிற்கு ஒரு அப்பாவாக, அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அங்கீகாரத்தை இப்போது உங்களுக்கு அளித்திருக்கின்றார்கள்.

**உயர்பதவிகளில் பெண்கள்!**

உங்களுடைய தம்பியாக, உங்களுடைய மகனாக இருந்து இதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இது உங்கள் உழைப்புக்கான உரிமைத் தொகை. ஆகவே தான், இந்தத் திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று தலைவர் அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள்.

மகளிர் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல, பொது வாழ்க்கையிலும் மகளிர் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போதுதான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்திப் பெற முடியும். இப்பொழுது உள்ளாட்சிப் பதவிகளில் 50% மகளிர் வந்திருக்கிறீர்கள்.

இன்னும் சொல்லப்போனால் நம்முடைய சென்னை மேயர், தாம்பரம் மேயர், கோயம்புத்தூர் மேயர் என்று உயர் பதவியில் இருப்பவர்கள் யார் என்று பார்த்தால் உங்களைப் போன்ற மகளிர்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி விடைபெறுகின்றேன். மகளிர் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று இருப்பதுதான் மகளிர் உரிமைக்கான அடித்தளம் ஆகும். உங்கள் குடும்பத்தில் ஒருவனாக தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிருக்கு ஒரு அன்பு வேண்டுகோள் வைக்கின்றேன்.

மகளிர் முற்போக்காகச் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். அப்போதுதான் உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக, சிந்திக்கக் கூடியவர்களாக அமைவார்கள்.

எனவே மகளிர் நிறைய படிக்க வேண்டும். முற்போக்காகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்போது தான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் முன்னேற முடியும். பெண்களும் பொருளாதாரமும் என்பது பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையில் நான் படித்திருக்கின்றேன்.

ஆண்களை விட மகளிர்தான் தங்களுடைய வருமானத்தில் பெருமளவில் தங்ளுடைய குடும்பப் பராமரிப்புக்காகச் செலவிடுவார்கள், சேமிப்பார்கள்.

எனவே, பொருளாதாரத்தில் மகளிர் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் ஒரு நல்ல பலனைத் தரும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று தொடங்கி வைத்திருக்கின்ற இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுதலாக அமையப்போகின்றது. இங்கு வந்திருக்கக்கூடிய பயனாளிகள் உங்கள் ஒவ்வொருவருக்கும் மகளிர் உரிமைக் கையேடு புத்தகம், உங்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தை, நீங்கள் அனைவரும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும். அந்தப் புத்தகத்தில் நம்முடைய கழக அரசு, 'திராவிட மாடல் அரசு' நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கெல்லாம் என்னென்ன திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள், அந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அந்தக் குறிப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

அந்தப் புத்தகத்தை நீங்கள் முழுமையாகப் படித்து இந்த அரசினுடைய திட்டங்கள் அத்தனையையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் திட்டத்தின் பயனாளிகளாக வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தையும், அன்பையும் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா வரவேற்புரை ஆற்றினார். சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையரும், கூடுதல் தலைமைச் செயலாளருமான டாக்டர்.இராதாகிருஷ்ணன் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வெங்கடேசன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# இரவிலும் தூங்காத சூரியனே வருக!- எங்கள் இதயத் துடிப்பாக இருப்பவனே வருக!

தங்கத் தமிழ்நாட்டைத்
தாங்கிப் பிடிக்கவே
தனிப்பிறவி எடுத்தாற்போல்,
தன்னை உருக்கித்
தலைப்பணிகள் செய்துவரும்
தங்கத் தளபதியே! எங்கள்
தலைமுறையின் அதிபதியே!

தகுதியே இல்லாத
தலையெல்லாம் மகுடங்கள்
தனக்குத்தான் என்று
தருக்கி அலைந்தாலும்,

தன்மானம் மிகுந்த
தன்தலையே மகுடமென்று
தரணிக்கே அறிவித்து
தமிழ்நாட்டை அதிர்வித்த
தண்டமிழ்ப் பாண்டியன்
கலைஞரின் திருவுருவே!
கண்ணியத்தின் மறுவுருவே!
கடமைக்குப் புதுவடிவே!

இணைவைக்க இன்னொருவர்
இல்லாமல், எப்போதும்
கணைவைத்துக் காத்திருக்கும்
கனல் போன்ற தூயவனே!

பாலூறும் மனம்படைத்த
பண்பாட்டுத் தலைவாஉன்னைப்
பாலாற்றங் கரையில்
பார்த்து மகிழ்வதற்கும்

நீயாற்றும் எழுச்சியுரை
நெஞ்சத்தில் சேர்ப்பதற்கும்
வாலாட்டும் பகைவென்று
வாகைப்பூ சூடுதற்கும்

கூடுகிறது வேலூரில்
கொம்பு சீவிப் புறப்பட்ட
கொள்கைப்போர்க் காளைகளின்
கூட்டம்...!

ஆட்டத்தின் நாயகனாய்
அகிலத்தின் கவனத்தை
ஈர்த்துப் பிடித்திருக்கும்
இனமானத் தளபதியே!

அண்ணாவைப் பெரியாரை
அணுவணுவாய் உள்வாங்கி
கண்ணாரப் பருகி
கருத்துகளில் உருகி
ஆழக் கடல்போல
அமைதியாய்த் தோன்றிய நீ..
இன்று
வேழம்போல் பாய்ந்து
விளையாடு கின்றாயே!
உன்
வீர விளையாட்டை
வேலூரில் காண்பதற்கு
வீறுகொண்ட தமிழ்க் கூட்டம்
வெற்றிநடை போட்டு
விரைகிறது பாராய்!

புல்லாங்குழலின்
காயங்களில் இருந்து
புறப்படும்
புத்தின்பப் புதுப்பாட்டாய்
களங்கள் பலகண்ட
காயங்கள் மூலம்
காவியங்கள் தீட்டிவரும்
காலத்தின் கொடையேஎங்கள்
கனவுகளின் விடையே!

கண்ணசைவில் சேனைகளைக்
களமிறக்கும் வித்தைகளைக்
கலைஞரிடம் இருந்து
கசடறக் கற்றதனால்
களவெற்றி கொய்கின்ற
காலத்தில் எல்லாம்

மலர்கொய்தல் போல
மலைசாய்க்கக் கற்றவனே!
தலைகொய்யும் மனிதரையும்
தலைகவிழ வைப்பவனே!

மாநிலங்கள் அனைத்துக்கும்
மதிவழங்கும் கொற்றவனே!
மாதரெலாம் போற்றுமுயர்
மாண்புகளைப் பெற்றவனே!

அனைவரும் அர்ச்சகர்
ஆகலாம் என்னும்
அரிய சட்டத்தில்

'பெண்ணும் ஆகலாம்' என்று
கண்ணும் கருத்துமாய் நின்று
கருத்துரைத்து
இன்னும் கூடுதல்
ஏற்றத்தைப் பெற்றிருக்கும்
தென்னாட்டுப் புண்ணியனே!
திராவிடத்தின் திரவியமே!

உன்னை வரவேற்கும்
உற்சாக மாநாட்டில்
உன்
அன்னையாய் இருந்துநான்
அள்ளி அணைத்து
அன்புப்பால் ஊட்டும்
ஆவலில் மிதக்கின்றேன்!

அறிவாலய வீரனே!
அரசியல் புதுப்பித்த
அண்ணாவின் சீடனே!
கலைஞரெனும் வானத்தின்
கதிரவனே...நீ வருக!

வேலூர் என்பது
வீரத்தின் விளைநிலம்.
'இந்தியா'வின்
விடுதலைப் புரட்சிக்கே
வித்திட்ட விதைநிலம்!

பூமிப் பந்தின்
புத்திரர்கள் என்று
போற்றப் பட்டவர்களை
புரட்டிப் போட்ட
பூகம்பக் கோட்டை நகரம்!

இந்தியாவை வாழ்விக்க
'இந்தியா' முளைத்துள்ள
இந்த இனிய நேரத்தில்
வேலூர்க் கோட்டைநகரில்
உன்
வெற்றிப் பாதங்கள்
பதிகின்றன..தலைவா!

செயின்ட் ஜார்ஜ் கோட்டையின்
சிங்க நாயகன் நீ
செங்கோட்டைக்கு ஆகிவிட்டாய்
சிம்ம சொப்பனமாக என்று,
வரிச் சித்திரங்கள்
வரையப்படும் தருணத்தில்

வேலூர் மாநகரில்
உன் விழி அசைவுக்காய்க்
காத்திருக்கிறது
கழகம் என்னும்
கடல்!

வேலூரில் வெடித்த
வீரக் களப்போரில்
விடுதலை வானத்தின்
விடியல் கீற்று
வெளிப்பட்டாற் போல
இந்தியாவுக்கு
இன்னொரு விடுதலை
வாங்கித் தரப்போகும்
வைரநெஞ்சத் தலைவா!
உன்னை
வரவேற்கிறது
வேலூர் மாவட்டம்!

கருத்தியல் புரட்சியின்
கனமான விளைவுகளைக்
கண்முன்னே கண்டு
களிப்புற்ற பெரியாரும்

காகிதங்களை ஆயுதமாக்கி
காயங்களைக் கவசமாக்கி
களங்களை மேடையாக்கி
காற்றைவிட வேகத்தில்
வெற்றிகளைக் கூட்டி
வீற்றிருந்த அண்ணாவும்

உதிர்ந்து விழுந்தாலும்
ஒவ்வொரு முறையும்
காம்பிலேபோய் ஒட்டிக் கொள்ளும்
உலக அதிசய
உழைப்புப் பூவாகி...

'உதய சூரியன் ஒருபோதும்
உதிராது' என்று
உலகக் கண்களுக்கும்
உள்ளூர்க் காதுகளுக்கும்
உரக்கச் சேதி சொன்ன
உயிரனைய தலைவர் கலைஞரும்



பின்னிப் பிணைந்து
பிழையறக் கலந்து
நீரில் புகுந்த
நீராய் இணைந்து
பாரில் உலாவும்
பைந்தமிழ்த் தலைவன்
இவன் என்று
பரபரப்போடு
பார்க்கப் படுகிறாய் நீ!

திராவிடம் என்கிற
தெளிந்த சிந்தனையைத்
திக்கெலாம் அள்ளித்
தெளிக்கிறாய் நீ!

அடைத்துக் கிடந்த
அறிவுணர்ச்சி வாசல்களை
ஆயிரம் யானை பலங்கொண்டு
அலட்சியமாய்த் திறக்கிறாய் நீ!

பெரியார் நெஞ்சின்
பெருமுள் எடுத்து
எக்காலத்தும் திறக்காத
இரும்புக் கதவுகளை
எக்காளம் இட்டு
உடைக்கிறாய் நீ!

கட்டுக் குலையாமல்
காப்பாற்றப்பட்ட
சனாதனச் சழக்குகளை
அழுக்கு வெளுப்பதுபோல்
அடித்துத் துவைக்கிறாய் நீ!

அதனால்..சில
'கர்மயோகிகளின்'(!)
கழுகுக் கண்களால்
கவனிக்கப் படுகிறாய் நீ!

'புழுதிப் புயலுக்குத்
தலைவணங்காது
பொதிய மலை' என்பதுசில
புண்ணாக்கு மலைகளுக்குத்
தெரியாது!

ஈரோட்டுக் கிழவனுக்கும்
எழிற்காஞ்சித் தலைவனுக்கும்
வாஞ்சையுடன் நாட்டை
வடித்தெடுத்த கலைஞருக்கும்
பொற்கால ஆட்சியில்
புகழ் வளர்த்து
நிகழ்காலத்தின்
நிறமாலையாய்த் திகழும்
நேரிய தலைவாஎங்கள்
சூரியத் தலைவா!

கவலைப் படாதே!
காலத்தால் நீ
கவனிக்கப் படுகிறாய்!
ஞாலத்தின் ஞானத்தால் நீ
அளக்கப் படுகிறாய்!

சிதறாத சீலத்தால் நீ
நோக்கப் படுகிறாய்!
அறம்சார்ந்த
ஆன்மிக உலகத்தாலும் நீ
அவதானிக்கப் படுகிறாய்!

அணுசக்தியை விடவும்
ஆற்றல் வாய்ந்த ஜனசக்தி

உன்
பின்னாலும் இருக்கிறது
முன்னாலும் இருக்கிறது!

உன்னை
அசைக்கத் துடிக்கும்
அத்தனை பேருக்கும்
அரசியல் அனுபவத்தோடு
அடியேன் சொல்கிறேன்!

அசைக்கப் படுவதற்கு நீ
அருகம்புல் அல்ல
ஆல விருட்சம்!

பல கோடி விழுதுகள்
பற்றிப் படர்ந்திருக்க
ஆகாயம் அளவுக்கு
அடர்ந்து நிற்கும்
அதிசயமான
ஆல விருட்சம் நீ!

உன் விழுதுகள் ஒருபோதும்
பழுதுகள் ஆகாது என்று
'பாரதத்திற்கு'ப்
பாடம் எடுக்கப்போகும்
மங்கல மாநாடு இது!

கிழக்கு வானத்தைக் கிழித்து
விடியலை எடுத்து
விழிகளுக்குக் கொடுத்த
வித்தகத் தலைவர்கள்
பெரியாரும் அண்ணாவும்
பெரும்புகழ்க் கலைஞரும்
இல்லையென்றாலும்
இருக்கின்றாய் நீயென்றே
இருக்கின்றார்கள்
எட்டுக் கோடி மக்கள்!

நல்லவர்களுக்கு
நடையில் நின்றுயர்
நாயகனாய் விளங்கும் நீ
பொல்லாதவர்களுக்குப்
புது நெருப்பாய்த் தோன்றுகிறாய்!

என்ன செய்வது
குன்றுபோல் குவிந்து கிடக்கும்
குப்பைகளை எரிக்கும்
கொள்கைத் தீ
சித்தரஞ்சன் சாலையில் தானே
நீறுபூத்துப் போகாமல்
நீல நாக்கோடு நிற்கிறது!

கொள்கையில் சமரசம்
குன்றிமணி அளவும்
கூடாது என்று,
நிமிர்ந்து எரியும்
நெருப்புக்குத் தெரியும்!

குப்பைகளை எரிப்பதுதான்
அதன் வேலை!
எதிர்ப்பது அல்ல என்று
எவரும் சொல்லிக் கொடுக்க
வேண்டியதில்லை
நெருப்புக்கு!

நீ
அடுப்புக்கு நெருப்பாய் இருந்து
பசி நெருப்பை அணைப்பாய்
வள்ளலாரைப் போல!

ஆதிக்கக் குப்பைகள்
சாதிக்க நினைத்தால்
சாம்பலாய் ஆக்குவாய்
ஊழித்தீ போல!

நீ
பெரியார் அண்ணா
பீடுமிகு கலைஞர் என்னும்
மூவரால் ஆன
முத்தமிழ்க் கலவை!

அதனால்தான்
ஒன்று விடாமல்
நிறைவேற்றுகிறாய்
அவர்கள் கனவை!

மழலையர் தமக்கு
மாதாவாய் இருந்து
ஊட்டுகிறாய் காலை
உணவை!

மாதாக்கள் நெஞ்சம்
மகிழ்விக்க வேண்டி

உரிமைத்தொகை தந்து
உவமை சொல்ல முடியாமல்
காட்டுகிறாய்
உன் உணர்வை!

வா.. தலைவா! வா..!
வாகைப்பூ சூடவே
வந்து பிறந்திட்ட
வசந்தத் தலைவனே.. வா!

வாட்டம் தீர்ப்பதற்கு
வாடாமல் உழைக்கின்ற
நாட்டம் மிகுந்தவனேஎங்கள்
நாடி நரம்புகளில்
கூட்டம் போட்டுக்
குருதிக்குச் சூடுதந்து
ஈட்டிவா வெற்றியென்று
ஈட்டிகளாய் இலட்சியத்தைக்
கூட்டிவைத்த கலைஞரெனும்
கோட்டைக்கு வேந்தனே!
கோட்டை நகரத்தின்
கூட்டத்தைக் காணவா!

எங்கள்
மனதில் விளையாடி
மகிழ்வில் உறவாடி
படையில் களமாடிப்
பாராளும் மன்னவனே!

பாசப் பாலாறு
பாய்ந்து வருமாறு
புதிய வரலாறு
பூக்க அழைக்கின்றேன்!

எப்பெரும் விழாவுக்கும்
இல்லாத சிறப்பு
இப்பெரும் விழாவாம்நம்
முப்பெரும் விழாவுக்கு
எப்போதும் உண்டு!

வா..தலைவா! வா!
புதிய வானத்தின்
புன்னகை வாசலை
நிலவுபோல் திறக்க
நீ... வா!

வரலாற்றுப் பொன்னேட்டில்
வாசனைத் தைலமாய்
மணக்கின்ற எங்கள்
மக்களின் தலைவா!


டாக்டர்
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய இணை அமைச்சர்




சிறுமையைக் கண்டால்
மட்டுமே
சினக்கின்ற தலைவா!
சிந்தனையால் மட்டுமே
கனக்கின்ற தலைவா!

சின்னஞ் சிறுவர்களும்
உகக்கின்ற தலைவா!
தேசத் தலைவர்களே
திகைக்கின்ற தலைவா!

திசையளக்கும் பகலவனாய்த்
தெறிக்கின்ற தலைவா...
தேமதுரத் தமிழ்நாட்டைத்
தீட்டுகின்ற தலைவா....

பெரும்படை காணவே
பிரியமுடன் வருந்தலைவா!
நாளைய உலகுக்கு
நம்பிக்கை தருந்தலைவா!
புதிய இந்தியாவைப்
படைப்பிக்கும் பெருந்தலைவா!

வானத்து மீன்களை
வரவழைத்தாற் போல
வந்து குவிந்திருக்கும்
மக்கள் வெள்ளத்தில்
நீ
நீந்தவா தலைவா!

எங்கள்
வாழ்த்துப் பூக்களை
உன்
இதயக் கரத்தில்
ஏந்தவா தலைவா!



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்
## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

தி.மு.க இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 17–9–2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் வேலூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள பாப்பிஸ் அனுகுலா ரெசிடென்சி அரங்கில், எனது தலைமையிலும் மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா மற்றும் சி.ஆனந்த்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள் :**

- **முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாரத்தான் போட்டிகள், பேச்சுப்போட்டிகள் நடத்துவது, கலைஞர் நூலகம் அமைப்பது.**
- **இளைஞர் அணி மாநில மாநாடு மற்றும் செயல்வீரர்கள் கூட்டம்.**

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 15–09–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

## தொடர் விடுமுறை.. சொந்த ஊர்களுக்கு படையெடுக்கும் மக்கள்

சென்னை, செப். 17 –

தொடர் விடுமுறை வருவதால், சென்னையில் வசிக்கும் மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு படையெடுத்துள்ளனர். சென்னையில் வசிக்கும் மக்கள் விடுமுறை தினத்தன்று தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். தொடர் விடுமுறை வந்தால் பெரும்பாலான மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வார்கள்.

இந்த நிலையில், சனி, ஞாயிறு மற்றும் விநாயகர் சதுர்த்தி என அடுத்தடுத்து விடுமுறை வருவதால், சென்னையில் வசிக்கும் மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு படையெடுத்துள்ளனர். இதனால் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. பயணிகளின் வசதிகளுக்காக, சென்னை கோயம்பேட்டில் இருந்து அரசு மற்றும் தனியார் பேருந்துகள் அதிகளவு இயக்கப்பட்டன.

வடபழனி, தாம்பரம் வழியாகவும், மதுரவாயல், வானகரம் சுங்கச்சாவடி வழியாகவும் பேருந்துகள் புறப்பட்டுச் சென்றன. ஒரே நேரத்தில் கோயம்பேட்டில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக பேருந்துகள் இயக்கப்பட்டதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அப்போது பணியில் இருந்த போக்குவரத்து காவலர்கள் போக்குவரத்து நெரிசலை சரி செய்தனர்.



# ஒழுக்கம்!

ஒழுக்கம் என்பது அன்னியனுக்குத் துன்பம் தராமல் நடந்து கொள்வதேயாகும்.

எந்த மனிதனும் அன்னியனுக்கு உபகாரியாயும் கடைசிப்பட்சம் அன்னியனுக்குத் தன்னால் துன்பம் கொடுக்காதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம் என்று சுயமரியாதை இயக்கத்தார் கருதி இருக்கிறார்கள்.

நம்முடைய மனம் நோகாமலிருக்கப் பிறர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ அதேபோல் நாம் பிறரிடம் நடந்து கொள்வதுதான் ஒழுக்கம் எனப்படும்.

நீதி என்றால் பொது நீதி, பொது ஒழுக்கம். எப்படி என்றால், நீ உன்னை எப்படி மற்றவர்கள் நடத்த வேண்டும், மதிக்க வேண்டும் என்று கருதுகின்றாயோ அது போல, நீ மற்றவர்களை நடத்தி ஒழுக வேண்டும். நீ எப்படி உன் பொருளை மற்றவன் கவரக் கூடாது என்று கருதுகின்றாயோ அது போலவே நீ மற்றவர் பொருளைக் கவர வேண்டும் என்று எண்ணக் கூடாது. நீ எப்படி உன் பெண்டு பிள்ளைகளை மற்றவன் பார்த்து ஆசைப்படக் கூடாது என்று எண்ணுவாயோ அதுபோல மற்றவன் பெண்டு பிள்ளைகளைப் பார்த்து நீ ஆசைப்படாதே. இது பொது நீதி, பொது ஒழுக்கம்.

ஒழுக்கம் என்பது சொல்லுகின்றபடி நடப்பதும் நடந்தபடி சொல்வதுமே ஒழிய தனிப்பட்ட குணம் அல்ல.

ஒழுக்கம் என்பது நமக்கு ஒருவன் தீமையைச் செய்தால் நாம் தீமை என்று எதை எதைக் கூறுகின்றோமோ அதை நாம் மற்றவருக்குச் செய்யாது இருப்பதாகும்.

சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கம் மிக அவசியமாகும்.

ஒழுக்கம் என்பது பிறரைப் பாதிக்கும்படியோ, அயலாருக்குத் தொல்லை ஏற்படும்படியோ, நடந்து கொள்ளாதிருப்பதுமே ஆகும்.

ஒழுக்கமற்றவரது செய்கைகளால் ஊருக்கே ஆபத்து உண்டாகலாம் !

**- தந்தை பெரியார்**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேராவூரணி மிசா மு. கிருட்டிணமூர்த்தி
### செப்டம்பர் 17 (2003)



கழகத்தின் ஆரம்ப கால அமைப்புகளில் வட்டச் செயலாளராக பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஓராண்டு காலம் மிசா கைதியாகவும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# இது, நிச்சயம் பெண்களை தலைநிமிர வைக்கும் முதன்மையான திட்டம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 17-

தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' குறித்து 'தினகரன்' நாளேடு தனது தலையங்கத்தில் இத்திட்டம் நிச்சயம் பெண்களை தலைநிமிரச் செய்யும் முதன்மையான திட்டம் என்று தமிழ்நாடு முதல்வர் அவர்களை பாராட்டி மகிழ்ந்துள்ளது.


தினகரன்
செப்டம்பர் 16, 2023 சனிக்கிழமை
முதன்மையான திட்டம்
திமுக அரசு, தனது 2021 சட்டமன்ற தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான குடும்ப தலைவிகளுக்கு மாதம் ₹1,000 என்ற திட்டத்தை, பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான நேற்று நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. அண்ணா சொந்த ஊரான காஞ்சிபுரத்தில், 1.06 கோடி பேருக்கான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கான அறிவிப்பு, நடப்பு நிதியாண்டு பட்ஜெட் தாக்கலின்போது வெளியிடப்பட்டது.
இத்திட்டம் நடைமுறைக்கு வந்த 5 நாட்களில், அதாவது செப்டம்பர் 20ம் தேதிக்குள் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் பணம் நேரடியாக செலுத்தப்பட்டுவிடும். இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படாத விண்ணப்பதாரர்கள், மேல்முறையீடு செய்ய விரும்பினால், அவர்களது மொபைல் போனில் குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் இ-சேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு

அது வருமாறு:-

அரசு, தனது 2021 சட்டமன்ற தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 என்ற திட்டத்தை, பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான நேற்று நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. அண்ணா சொந்த ஊரான காஞ்சிபுரத்தில், 1.06 கோடி பேருக்கான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கான அறிவிப்பு, நடப்பு நிதியாண்டு பட்ஜெட் தாக்கலின் போது வெளியிடப் பட்டது.

இத்திட்டம் நடைமுறைக்கு வந்த 5 நாட்களில், அதாவது செப்டம்பர் 20ம் தேதிக்குள் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் பணம் நேரடியாக செலுத்தப்பட்டுவிடும். இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படாதவிண்ணப்பதாரர்கள், மேல்முறையீடு செய்ய விரும்பினால், அவர்களது மொபைல் போனில் குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் மீது 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

மகளிர் உரிமைத் திட்டம் 2 நோக்கங்களை கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாள் எல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்கு கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்தது ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கை தரத்தை உயர்த்தி, சுய மரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தை பொறுத்தவரை, தமிழ்நாட்டில் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பெண்கள் பயனடைகிறார்கள் என்பதைவிட, ஒரு கோடி குடும்பங்கள் பயனடைகின்றன என எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். ஏழை, எளிய பெண்களுக்கு, யாரையும் எதிர்பார்க்க தேவையில்லாத பொருளாதார விடுதலையை இத்திட்டம் அளித்துள்ளது. மாதம் ஆயிரம் ரூபாயில் பெண்கள் பொருளாதார தன்னிறைவு அடைந்து விடுவார்களா? என சிலர் விமர்சனம் முன்வைக்கிறார்கள்.

தன்னிறைவு என்பதைவிட, தங்கள் கைகளை நேரடியாக வந்து சேரும் இந்த பணம், பெண்களுக்கு நிச்சயம் உளவியல் ரீதியில் தன்னம்பிக்கையை தரும் என்பதே உண்மை. தங்களது சிறு செலவுக்காக, யார் கையையும் எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியதில்லை என்பது இன்னொரு சிறப்பம்சம் ஆகும். பெண்களுக்கென்று தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் 'கட்டணமில்லா பேருந்து' திட்டத்தையும் சிலர் இப்படித்தான் ஆரம்பத்தில் விமர்சனம் செய்தனர். எதையும் அரசியல் உள்நோக்கத்துடன் மட்டுமே பார்க்கும் சிலர், நக்கலும், நையாண்டியுமாக கருத்து தெரிவித்தனர்.

பக்கத்து ஊருக்குச் செல்ல, பத்து ரூபாய்கூட இல்லாத பெண்களுக்குத்தான் தெரியும் 'கட்டணமில்லா பேருந்து' திட்டத்தின் அவசியமும், தேவையும். இன்று, லட்சக்கணக்கான பெண்கள் இத்திட்டத்தில் பயன்பெறுகிறார்கள் என்பதால் விமர்சனம் காற்றில் பறந்துவிட்டது. 'கலைஞர் மகளிர் உரிமைத்' திட்டமும் அப்படித்தான். தகுதியானவர்களை அடையாளம் கண்டு, முறையாக இத்திட்டத்தை தமிழ்நாடு அரசு அமல்படுத்தியுள்ளது. இது, நிச்சயம் பெண்களை தலைநிமிர வைக்கும் முதன்மையான திட்டம் ஆகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


### பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறை

கலைஞர் 100 1924 - 2023

ம.நீ.வ.து.ந.க.எண்.0527 / 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி இரண்டு உறை முறையில் கோரும் அறிவிப்பு**

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு (With GST) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்ததாரர் வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 1, 4, 6, 7, 8, 9, 10, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் நீர்வழி கால்வாய் மேம்படுத்தும் பணிகள் (8 சிப்பங்கள்) | ரூ.123.61 முதல் ரூ.2221.82 இலட்சம் | பணியின் மதிப்பில் 1% | முதல் வகுப்பு |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 25.10.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கப்படும் நாள் 26.10.2023 மற்றும் நேரம் மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 5128 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் / ம.நி.வ.து.


## கடலூர் கிழக்கு - மாவட்ட தொண்டரணி தலைவர்

# ப.ராஜேந்திரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!


கடலூர், செப். 17-

கடலூர் கிழக்கு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. தொண்டரணி தலைவர், மாடு (எ) ப. ராஜேந்திரன் (வயது 64) அவர்கள் நேற்று முன்தினம் (15.9.2023) இரவு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலமும், நல்லடக்கமும் நேற்று (16.9.2023) மாலை 5.00 மணி அளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நடைபெற்றது.




## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா
## தி.மு.க. பவள விழா ஆண்டு
# தி.மு.க. முப்பெரும் விழா-2023



நாள் : 17 – 9 – 2023
ஞாயிறு மாலை 5 மணி

இடம் : பள்ளிகொண்டா,
வேலூர்.

வரவேற்புரை
**ஏ.பி.நந்தகுமார்** எம்.எல்.ஏ.,
செயலாளர் – வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை
பொதுச் செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**
**“கழக விருது” க்காக**

தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று – பணமுடிப்பு வழங்குதல்

*****

**விருது வழங்கும் விழா**

*விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை*
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# தலைவர் மு.க.ஸ்டாலின்

வாழ்த்துரை
பொருளாளர் **டி.ஆர்.பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச் செயலாளர்கள்
டாக்டர் **க.பொன்முடி, ஆ.இராசா,**
**கனிமொழி கருணாநிதி,** அந்தியூர் **ப.செல்வராஜ்**

*விருது பெறுவோர்*

| பெரியார் விருது | அண்ணா விருது | கலைஞர் விருது | பாவேந்தர் விருது | பேராசிரியர் விருது |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| கி.சத்தியசீலன் | க.சுந்தரம் | மாண்புமிகு ஐ.பெரியசாமி | திருமதி மலிகா கதிரவன் | ந.இராமசாமி |

நன்றியுரை : **ப.கார்த்திகேயன்** எம்.எல்.ஏ.,
செயலாளர் – வேலூர் மாநகர தி.மு.க.

தி.மு.க. தலைமைக் கழகம்

ARASU ARTS

# கலைஞரும் நானும் 36

“ கலைஞரின் இதய மருத்துவராக அவரைக் கவனித்துக் கொண்டதன் மூலம் எட்டு கோடி தமிழர்களின் இதயத் துடிப்பை கவனித்துக்கொண்டேன். ஆனால், கலைஞரின் இதயம் எனக்கு எந்த வேலையையும் கொடுத்ததில்லை என்பதே என் திருப்தி” என கலைஞருடனான நினைவுகளைப் பகிர்கிறார் மருத்துவர் வி.சொக்கலிங்கம்.

■ **வி.சொக்கலிங்கம்,** இதயநல மருத்துவர்

## “அவரது இதயம் அண்ணாவுடையது!”

**க**லைஞரை முதன்முதலில் சந்தித்தது, எனது திருமணத்தின் போதுதான். 1972- ஆம் ஆண்டில், அவர் முதலமைச்சராக இருந்தபோது, அவரது தலைமையில் திருமணம் நடைபெற்றது. எதார்த்தமாக கழக முன்னோடிக்கு மருமகனாக அமைந்ததால், கழகத்தினர் அனைவரும் திரண்டு வந்த திருமண நிகழ்வாக இருந்தது. அப்போது முதல், கலைஞரின் அன்புக்குப் பாத்திரமாக இருக்கிறேன்.

### பத்து மாத்திரைகள்

1972-ஆம் ஆண்டு கலைஞர் இதயநோய்க்காக ஒரு நாளைக்குப் பத்துக்கும் மேற்பட்ட மாத்திரைகளை எடுத்துக் கொண்டிருந்தார். அவரது உடல் ஆரோக்கியத்துக்கு அந்த மாத்திரைகள் தேவையில்லாதது. எனவே சில அடிப்படை சோதனைகளுக்குப் பின், ‘அய்யா அந்த மாத்திரைகளை நிறுத்திவிடலாம்’ என்றேன்.

“எனக்கு இதய நோய் தொடர்பான சிக்கல் இல்லை என்பதை எப்படிச் சொல்கிறாய்?” எனக் கேட்டார். “அய்யா, இதயநோய் தொடர்பான அறிகுறிகள் 95 சதவிகிதம் பேருக்கு உண்மையாகவே இருக்கும். சிலருக்கு அந்த அறிகுறி இருக்கும், ஆனால், நோய் இருக்காது. நீங்கள் அந்த 5 சதவிகிதத்தினரில் இருக்கிறீர்கள்” என்றேன்.

“எனக்கு உறுதி செய்து காட்டு, நிறுத்தி விடுகிறேன்” என்றார். டிரட்மில்லில் ஓடச் செய்து இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்து, சோதனை செய்து பார்க்கும் ஒரு முறை உள்ளது. அதைச் செய்து பார்த்ததில் அவருக்கு எந்தப் பிரச்சினையுமில்லை என்பதை உறுதி செய்தேன். அன்றிலிருந்து மாத்திரைக்கு விடை கொடுத்தார். அந்த நிகழ்வுக்குப் பின் அவருக்குப் பிடித்த மருத்துவராகிவிட்டேன். எனது பெயரை முழுமையாகச் சொல்லமாட்டார். செல்லமாக ‘சொக்கு’ என்பார்.

### மாடிப்படிகளில் ஓட்டம்

சில நேரங்களில் அவரின் கிடுக்கிபிடி கேள்விகள் திகைக்க வைக்கும். ஒருநாள் கோபாலபுரம் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது, “எல்லோரது இதயத்தையும் பார்த்துக் கொள்கிறாயே, உன் இதயத்தை எப்படிப் பார்த்துக்குவே?" எனக் கேட்டார். “நான் ஏழாவது மாடியில் பணியாற்றுவதால், படியேறிச் செல்வதன் மூலம் எனது இதயத் துடிப்பினை சோதித்துக் கொள்வேன் ஐயா” என்றேன். “அப்படியெனில், நானும் அப்படியே செய்கிறேன்”என 20 தடவைக்கு மேல் மாடிப்படிகள் ஏறி இறங்கி வந்தார். அந்த முனைப்பு ஆச்சரியம் அளிக்கும்.

அவருக்கு மட்டுமல்ல, அவரைச் சார்ந்தோருக்கும் ஏதாவது என்றால் துடித்துவிடுவார். ஒருநாள் நள்ளிரவில் போன் செய்தார். “வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கு இதயப் பிரச்சினை. நீ உடனே போய்ப் பார்த்துவிட்டு வா எனக் கார் அனுப்பினார்”. அதுபோல கலைஞர் குறிப்பிட்டு கழகத்தினர், எம்.எல்.ஏ எனப் பலருக்கும் நான்தான் இதய மருத்துவராக இருக்கிறேன்.



### நிற்காத நடைப்பயிற்சி

உடல்நலத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும், உடம்பிலும், மனதிலும் பாரம் இருக்கக்கூடாது என்பதற்காக, ஜப்பானில் நடந்த சம்பவம் ஒன்றை அவருக்குச் சொன்னேன்.

“ஒருமுறை ஜப்பானில் நூறு ஆண்டு வாழ்வது எப்படி என்கிற தலைப்பில் பேசினேன். பத்தாயிரம் பேருக்கு மேல் கூட்டம், அதில் இரண்டாயிரம் பேர் எழுந்து உங்க பேச்சை கேட்க விருப்பமில்லை என்றனர். ஆனால், அவர்கள் எல்லாம் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவர்கள் அய்யா” என்றேன். “எப்படிய்யா அப்படி வாழமுடியும்?” எனக் கேட்டவரிடம், “உங்களைப் போல மொழிக்காகவும், இனத்துக்காகவும், சமுதாயத்துக்காகவும் வாழ்பவர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள்” என்றேன். அதையெல்லாம் ரசிப்பார். கேட்டுக் கொள்வார்.

முன்பெல்லாம் அவ்வப்போதுதான் நடைப்பயிற்சி செய்வார். “அய்யா நடைப்பயிற்சி இதயநலனுக்கு அவசியம், விடாமல் செய்யவும்” என வலியுறுத்தியதால் அந்தப் பழக்கத்தைச் செயல்படுத்தினார். “குறைந்தது அரைமணி நேரம் போகணும்” என்றேன். அவர் ஐம்பது நிமிடங்களுக்கு மேல் நடைப்பயிற்சி செய்யத் தொடங்கிவிட்டார். கடைசிவரை, நடைப்பயிற்சியை விடவில்லை.

> **“எல்லோரது இதயத்தையும் பார்த்துக் கொள்கிறாயே, உன் இதயத்தை எப்படிப் பார்த்துக்குவே?" எனக் கேட்டார்.**

எவ்வளவு மழை பெய்தாலும் நடை நின்றதில்லை. அதுபோல உணவுமுறைகளில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதில், அவரைப் போல யாரையுமே பார்க்க முடியாது.

### சிலேடைகளுக்குச் சிரித்தார்

சிலேடைகள், நகைச்சுவைகளால் அவர் பிறரை ரசிக்க வைப்பதுபோல, அவரை ரசிக்க வைப்பவர்களை அவருக்குப் பிடிக்கும். ஒருமுறை “அய்யா உங்க இதயம் உறுதியானது. அதில் எந்த நோயும் அண்டாது” என்றேன். “எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்ற?” எனக் கேட்டார். “ஆமாம், அண்ணா மறைவின்போது உன் இதயத்தை இரவலாகத் தந்திடண்ணா, நான் வரும்போது கையோடு கொண்டு வருவேன் என அவரது இதயத்தை அல்லவா வாங்கி வைத்திருக்கிறீர்கள். அதனால் அந்தக் கொள்கை உறுதிகொண்ட இதயத்தில் நோய்கள் அண்டாது” என்றேன். அதை அவ்வளவு வெகுவாக ரசித்தார்.

அதுபோல, மற்றொருமுறை அவர் இருந்த மேடையில் பேசுகையில், எல்லோருக்கும் ஸ்டெதஸ்கோப் வைத்துக் கேட்டால் **‘லப் டப், லப் டப்’** எனக் கேட்கும். தலைவரின் இதயம் மட்டும் **‘தமிழ், தமிழ்’** எனக் கேட்கும் என்றேன். இப்படிச் சிலேடைப் பேச்சுகளால் அவரை ஈர்க்க முடியும்.

### இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதல்

ஒருமுறை தொலைக்காட்சியில் பேசுகையில், ‘ஆயிலைக் குறைத்து, ஆயுளைக் கூட்டுவோம்’ என கூறியிருந்தேன். அதன்பின்னர் கலைஞரை சந்திக்க வந்திருந்தபோது, நீ டிவில சொன்னியே அது நல்ல ஆலோசனை என பாராட்டினார். அதுபோல கல்லூரி நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் தவறாமல் வருவார், ஆலோசனைகளும் அளிப்பார். ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்தபோதுதான், நீங்களெல்லாம் இதயமாற்று அறுவைச் சிகிச்சையை இங்கேயே செய்யணும் என வலியுறுத்தியதுடன், அதற்கு அரசின் முழு ஒத்துழைப்பை அளித்துத் தொடங்கி வைத்தார். இந்தியாவிலேயே முதல்முறையாக அரசு மருத்துவமனையில் அந்த சிகிச்சை தொடங்கியது.

டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக என்னை நியமிக்க விரும்பினார். அதற்குரிய தகுதியும், முன்னுரிமையும் எனக்கு இருந்தது. ஆனால், எனக்கு நிர்வாக பணிகள் வராது என்பதால் நான் மறுத்து விட்டேன். அந்த வருத்தம் அவருக்கு இருந்ததை அறிவேன். நான் மருத்துவராக இருப்பதையே விரும்புகிறேன் என அவரிடம் சொல்லிவிட்டேன்.

### கைநாடியும், கண்களும்

“கை நாடி பார்த்தே இதயப் பிரச்சினைகளை அறியலாம் என்கிறார்களே உண்மையா?” என்று ஒருநாள் கேட்டார். “ஆமாம், முடியும். ஆனால் இதுதான் பிரச்சினை என்பது ஆய்வகச் சோதனைக்குப் பின்னரே தெரியும். ஆனால், பிரச்சினை இருக்கு என்பதை கை நாடித் துடிப்பில் கண்டுபிடித்துவிட முடியும்” என்றேன். ‘அப்படின்னா, என் கையைப் பாருய்யா’ என்பார்.

இந்தப் பழக்கம் ஒரு எழுதப்படாத ஒப்பந்தமாகவே நீடித்தது. எங்காவது வெளியில், நிகழ்ச்சிகளின்போது பார்த்தால், நான் அவர் கையைப் பிடிப்பதுபோல பிடித்து நாடி பார்ப்பேன். நாடி பார்க்கிறேன் என்பது யாருக்கும் தெரியாது. அது எனக்கும் அவருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். அப்போது எனது கண்களைப் பார்ப்பார். நானும் ஒன்றும் இல்லை என்று ஜாடை செய்து விடுவேன். இப்படி அன்பால், அரவணைப்பால், நல்லுணர்வால் என்னைப் பிணைத்த தலைவர் கலைஞர்.

“நீ இதயத்தை நல்லா பார்த்துகிறியே, ஆனால், இந்த முதுகுவலியை ஒண்ணும் செய்ய முடியலையே?" என்பார். அவரது இதயம் இப்போதும் துடித்துக் கொண்டிருக்கிறது. நான் நாடி பிடித்துப் பார்க்கிறேன். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அந்த நினைவுகளுக்கு அழிவில்லை.

**...பகிர்வார்கள்**

---

### திராவிடம் கற்கலாம் வாருங்கள்!



‘**தி**ராவிடச் சிந்தனையால் ஈர்க்கப்படாமல் இருந்திருந்தால், கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருப்பேன்’ என்பார் முத்தமிழறிஞர் கலைஞர். மாக்ஸிம் கார்க்கியின் **‘தாய்’** நாவலை, கவிதையாகப் படைத்ததில் தொடங்கி தனயனுக்கு ஸ்டாலின் என்று பெயர் வைத்தது வரை கம்யூனிசத்தின் மீதான பற்று, கலைஞருக்கு வாழ்நாள் முழுக்கத் தொடர்ந்தது.

அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில், மானுடவியல் துறையில் ‘Marxism and Dravidian Politics’ என்ற பெயரில் புதிதாக ஒரு பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நடந்த அரசியல் மாற்றம் குறித்தும், இனம், வர்க்கம், சாதி, பாலினம், மொழி ஆகியவற்றின் மீது திராவிட அரசியல் செலுத்திய தாக்கம் குறித்தும் இப்படிப்பின் மூலம் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலையுதிர்கால (Autumn) படிப்பாக அறிமுகம் செய்யப்படும் இதில் மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார் பற்றியும் ஆழமாகப் பயிற்றுவிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திராவிட மாதமான செப்டம்பர் - 26 தொடங்கி, டிசம்பர் 8 அன்று இப்பாடம் நிறைவடைகிறது.

சர்வதேச அளவில் திராவிட இயக்கம் குறித்த ஆய்வுகள் மேலும் ஆழமாக விரிவடையவும், இந்தியாவுக்கு வழிகாட்டவும் இம்முயற்சி உதவும்.

---

### ஃப்ளாஷ்பேக்



#### உழைப்புக்கு எடுத்துக்காட்டு!

1988-ஆம் ஆண்டு , முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், எனது தாய் - தந்தையரின் (குமாரி - இராஜேந்திரன்) திருமணத்தை நடத்தி வைத்தார். அவரின் வாழ்த்துரையில் மாவீரர் அலெக்சாண்டர், கார்ல் மார்க்ஸ் ஆகியோரைப் போல லட்சிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று வாழ்த்தியுள்ளார். அந்த நிகழ்வின்போது முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி, துரை முருகன், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் தானிப்பாடி பொன்முடி ஆகியோரும் இருந்தனர். இந்த நிகழ்வை முடித்துக் கொண்டு தலைவர் அவர்கள் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்றதாக என் தந்தை என்னிடம் பெருமையாகக் கூறுவார்.



ராஜசேகர்

**-இரா.ராஜசேகர், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.

அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

### கருவூலம்

#### அமெரிக்கப் பயணம்!

**1971-ஆம் ஆண்டில், கண்ணில் ஏற்பட்ட வலிக்கு சிகிச்சை எடுப்பதற்காக அமெரிக்கா புறப்பட்டார் கலைஞர். கண்ணில் அடிக்கடி வலி ஏற்பட்டு, தாங்கிக்கொள்ளவே முடியாத நிலை என்பதால், மருத்துவர்கள் ஆலோசனையின் பேரில், அமெரிக்கா புறப்பட்டார் கலைஞர். அமெரிக்க அரசாங்கமும் அழைத்திருந்தது. சிகிச்சைக்குப் புறப்பட்ட அந்த நேரத்திலும், பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலை முடித்துவிட்டு, நவம்பர் மாதம் 8-ஆம் தேதி விமானம் ஏறினார் கலைஞர்.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 243




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131